கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

2-9-1973

40 காசு





பண்டைய நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
மபத்லால்
க்ரூப் அளிக்கும்
சேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்

கோகுலம்


மலர் 2 : இதழ் 11

செப்டம்பர் 2, 1973


பிரமாதீச, ஆவணி 17

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்



★



சந்தா விவரம் :

ஒரு வருடம் ரூ. 10–00

ஆறு மாதம் ரூ. 5–00


நிர்வாகி, கோகுலம்

கல்கி பூங்கா, சென்னை-600031

அட்டையில் :

வண்ணப் பந்து
வைத்திருக்கும் பையா !
வாழ்க்கை ஒரு
சக்கரம்தான் - மெய்யா ?

வண்ணப்படம் : புஞ்சைத்துறை சுப்ரமணியம்



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார்

இமாசலத்தில் பங்குனி உத்தரத்தன்று பார்வதி யம்மையாருக்கும் பரமசிவத்துக்கும் திருமணம் நிகழ்கின்றபோது தேவர்களும் முனிவர்கள் முதலியவர்களும் குழுமினார்கள். அதனால் வட கோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது.

சிவபெருமான் உருவத்தால் குறுகியவரும் பெருமையால் சிறந்தவருமான அகத்திய முனிவரைத் திருக்கண் நோக்கம் செய்தருளினார்.

''அன்ப! நீ பொதிய மலைக்குச் சென்று இருப்பாயாக. அதனால் நிலம் சமமாகும்'' என்று அருளிச் செய்தார். அகத்தியர் இறைவனைத் தொழுதார். ''கருணைக் கடலே! தேவரீருடைய திருமணக் கோலத்தைச் சிறியேன் கண்டு களிக்கும் பெரும் பேற்றை இழக்கின்றேனே'' என்று கூறிக் கண் கலுழ்ந்தார்.

சிவபெருமான், ''அன்புள்ள அருமைத் தபோதனா! நம் திருமணக் காட்சியை அங்கேயே உமக்குக் காட்டுவோம். உலக நலன் கருதி நீ செல்லுக'' என்றார்.

அகத்தியர், ''தேவ தேவ! ஒரு புண்ணிய நதியைத் தரவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

சிவபெருமான் தமது சடா முடியில் உள்ள காவிரி நதியை எடுத்து ஒரு கமண்டலத்தில் அடைத்து அவரிடம் கொடுத்தார்.

''காவிரியே! அகத்தியன் கைகாட்டும் இடத்தில் நீ பெருக்கெடுப்பாயாக'' என்று கட்டளையிட்டார்.

அகத்தியர் காவிரி நதி அடங்கிய கமண்டலத்துடன் தென்னகத்தை நோக்கிப் புறப்பட்டார். வழியில் உள்ள சிவ தலங்களை வழிபட்டுக் கொண்டு குடகு மலையில் தங்கிச் சிவ பூஜை செய்து கொண்டிருந்தார்.


இந்திரன் சீயாழியில் சிவ பூஜை செய்து கொண்டிருந்தான். அப்போது மழையின்றிப் பயிர்களும் உயிர்களும் வாடி வருந்தின.

இந்திரனை நாரத முனிவர் சந்தித்து, ''தேவேந்திரா! காவிரி நதியால் இந்நாடும் நின் நந்தவனமும் செழிக்கும். காவிரி நதியை அகத்தியர் கமண்டலத்தில் கொணர்கிறார். இப்போது அகத்தியர் குடகு மலையில் சிவ பூஜை செய்து கொண்டிருக்கிறார். நீ கணபதியை வழிபடுவாயானால் கருணைக் கடலாகிய கணேசர் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைத் தருவார்'' என்று ஆலோசனை கூறினார்.

இந்திரன் கணபதியின் திருவுருவத்தை அமைத்துப் பால், தயிர், நெய் இளநீர், சந்தனம் முதலிய பொருள்களால் அபிஷேகித்தான். பட்டாடை சாத்தித் தூபதீபம் காட்டிக் கணநாதருடைய காயத்திரி மந்திரத்தைக் கூறி

தத் புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ கணேச ப்ரசோதயாத்

அர்ச்சனை புரிந்து உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகி மனமொழி மெய்களால் வழிபாடு செய்தான்.



மூவருக்கும் தேவருக்கும் தலைவ ராகிய மகா கணபதி அவன் முன்னே காட்சி தந்தருளினார்.

''அமரேச! உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்றார்.

இந்திரன், ''ஐந்து கரத்து அண் ணலே! அகத்தியருடைய கமண்டலத் தைக் கவிழ்த்துக் காவிரி நதி பெருகி யோட அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டினான்.

கணேச மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று அகத்தியர் அருகில் உள்ள கமண்டலத்தின் மீது அமர்ந்தார். சிவ பூசை செய்து கொண்டிருந்த அகத்தியர் கையை நீட்டிக் காகத்தை ஓட்டினார்.

கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டுக் காகம் பறந்தது. அகத்தியர் கையை நீட்டியதனால் நாம் ஓடும் காலம் இது தான் போலும் என்று கருதிய காவிரி பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. இதனைக் கண்ட அகத்தியர் வெகுண்டு பார்த்தார். காக உருவம் மாறி அங்கு ஒரு சிறுவன் நிற்பதைக் கண்டார். அகத்தியர் இம் மறைச் சிறுவன் மாயக் காரன் போலும் என்று எண்ணி, கையை மடக்கி அவன் தலையிலே குட்டும் பொருட்டு ஓடி விரட்டினார். சிறிது அவரை அலைக்கழித்த பின் கணேசர் அகத்தியருக்குக் காட்சி தந்தருளினார்.

அகத்தியர் அஞ்சி நடுங்கினார். ''அண் ணலே! ஆனைமுகக் கடவுளே! உமது பெருமை அறியாது உம் மைக் குட்ட முயன்றேனே! இப் பாவம் எப்படி என்னை விட்டு நீங் கும்?'' என்று அழுது தொழுது தமது சென்னியில் ஓங்கிக் குட்டிக்கொண்டார்.

கணேசப் பெருமான் அகத்தியரின் கைகளைப் பற்றி அருள்புரிந்தார். காவிரியின் நீரில் சிறிது அள்ளிக் கமண்ட லத்தை நிரப்பிக் கொடுத்து, ''இங்கே காவிரி ஓடுவதாக. நீர் வருந்தற்க. பொதியமலை செல்லுக. உம்மைப் போல் என்னை வழிபடுவோர் தம் சிரத்தில் குட்டிக் கொண்டால் அவர்களின் அறி யாமை நீங்கப் பெற்று அறிவினைப் பெறுவார்கள்'' என்று வரமருளி அருள் புரிந்தார். அதுமுதல் விநாயகப் பெரு மானை வழிபடுவோர் சிரசில் குட்டிக் கொண்டு மதிநலம் பெறுவராயினர்


விநாயகருடைய திருமுன் தோப்புக கரணம் இட்டுச் சிரத்தில் குட்டிக் கொண்டால் அறிவு நாடி விளக்க முறும். அதனால் அறியாமை விலகி அறிவு ஒளி உண்டாகும்.

கணேச மூர்த்தி காவிரியை நல்கிய தால் சோழ நாடு தழைத்தது. சீர்காழி யில் உள்ள நந்தவனம் செழித்தது. விநாயகர் காவிரி கண்ட கணபதி என்ற ஒரு பெயர் பெற்றார்.

(தொடரும்)



ஓநாய்ப் பையன்



நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னே ஒரு செவ்விந்திய வீரன் இருந்தான். அவன் ரொம்பக் கருணை உள்ளம் கொண்டவன். எல்லோரையும் நேசிக்கும் மனப்பான்மை உடையவன். அவன் இனத்து மக்கள் கொடுமை நிறைந்தவர்களாகவும் கல்நெஞ்சர்களாகவும் இருந்தார்கள். இது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவர்களோடு சேர்ந்து வாழ்வதையே வெறுத்தான் அவன். ஆகவே அந்தக் கூட்டத்தாரை விட்டு விலகிக் கானகத்தினுள் நெடுந்தூரம் போனான்—தன் மனைவி குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சலசலத்து ஓடும் ஓர் ஓடைக் கரையில் தன்னுடைய விக்—வாமை (கூடாரத்தை) அமைத்துக் கொண்டு வாழலானான். தனிமை அவனுக்கு இனிமையே அளித்தது.

இப்படிப் பல வருஷங்கள் வாழ்ந்த அவன் ஒரு நாள் நோய்வாய்ப்பட்டான். இனி தான் உயிர் வாழப் போவதில்லை என்பதை உணர்ந்த அவன் தன் மனைவியையும் மூன்று குழந்தைகளையும் அருகே அழைத்தான். ''நான் உங்களை விட்டுப் பிரியும் வேளை நெருங்கிவிட்டது. என் வாழ்வில் எனக்குத் துணையாக இருந்துவந்த நீயும் இன்னும் சில நிலவுகளுக்குப் பிறகு என்னை வந்தடைவாய். ஆனால் என் குழந்தைகளே! நீங்கள் இளமையோடு இருப்பவர்கள். வாழ வேண்டிய காலம் உங்கள் முன்னால் நீண்டு கிடக்கிறது. அந்தப் பாதையில் நீங்கள் கொடுமை, அன்பில்லாமை, சுயநலம் ஆகியவைகளைச் சந்திக்கப் போகிறீர்கள். அவைகளிடமிருந்து தப்புவதற்காகவே நான் இந்தத் தனிமையான இடத்தை நாடி வந்தேன். உங்களை நல்ல நிலையில் விட்டுப் போகிறேன். நீங்கள் 'ஒருவருக்கொருவர் அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழ்கிறோம். குட்டித் தம்பியை எந்நாளும் தனியே தவிக்க விடமாட்டோம்' என்று எனக்கு உறுதி அளித்தால்தான் நான் சந்தோஷமாகப் போவேன்'' என்று கூறினான்

''அப்படியே நடப்போம்'' என்று தங்கள் கைகளை நீட்டி மௌன அஞ்சலி செலுத்தினார்கள், பெரியவர்களான அண்ணனும் தங்கையும். அந்தச் செவ்விந்திய வீரனும் நிம்மதியாக மகிழ்ச்சி நிறைந்த புனித வேட்டைக் களத்துக்குப் பயணமானான். வானுலகத்தைச் செவ்விந்தியர் புனித வேட்டைக் களம் என்றே அழைப்பார்கள்

அவன் கூறிச் சென்றபடியே எட்டுப் பௌர்ணமிகளுக்குப் பிறகு அவன்

மனைவியும் அவனைப் பின்தொடர்ந்தாள். மூன்று குழந்தைகள் மட்டும் தனித்து விடப்பட்டனர்.

கோடை மறைந்து பனிக் காலம் ஆரம்பமாயிற்று. எங்கு நோக்கினாலும் வெளேரென்ற பனி மூடிக் கிடந்தது. ஊ ஊ என்று ஊளையிடும் ஊதல் காற்றோடு பைன் மரக் காடுகளி டையிலிருந்து ஓநாய்களின் உறுமலும் கேட்டது. குழந்தைகள் மூவரும் தந்தை உருவாக்கிக் கொடுத்திருந்த விக்வாமுக்குள் ளேயே முடங்கிக் கிடந்தார்கள்.

குட்டித் தம்பியிடம் அன்பும், ஆதரவும் காட்டிக் கண்ணே போலக் காத்து வந்தனர்.

வசந்தம் வந்தது. பனி உருகி ஓடியது. பசும் புற்கள் பூமியிலிருந்து தலை நீட்டி எட்டிப் பார்த்தன. மூவரில் மூத்தவன் வயது வந்த வாலிபனாகி விட்டிருந்தான். இந்தத் தனிமை வாழ்வு அவனுக்குப் பிடிக்கவில்லை. தன் இன மக்க ளோடு சேர்ந்து, அவர்கள் கூடாரங்களுக்குப் போய் யுத்த நடனத்தில் கலந்து கொண்டு மகிழ வேண்டுமென்று விரும்பி னான். தன் வில்லையும், அம்புப் பையையும் எடுத்துக் கொண் டான். கம்பளிப் போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டான். தன் இனத்தவர்களை நோக்கிச் செல்லலா னான். தன் இனத்தவர்களை நாடிச் சென்ற அண்ணன் மறுபடி யும் கூடாரத்துக்குத் திரும்பி வரவேயில்லை.

இந்த இடைக்காலத்தில் சகோதரியின் மனத்திலும் சுய நலம் புகுந்து கொண்டது. குட்டித் தம்பி ஒரு பெரும் பார மாகத் தோன்றினான். வெகு தூரத்துக்கப்பால் காட்டைத் தாண்டிச் செவ்விந்தியக் கிராமத்தில் டோடெம் கம்பத்தைச் சுற்றித் தன் அண்ணன் நடனமாடுவதையும், அவனையொத்த வாலிபர்கள் அதைக் கண்டு கைதட்டி ஆர்ப்பரிக்கும் அந்தக் காட்சியையும் மனத் திரையில் கண்டு மகிழலானாள். தானும் அங்கு போக முடியவில்லையே என்ற ஏக்கம் அவளை வாட்டியது. ஓடத் துடிக்கும் கால்களை எத்தனை நாளைக் குத்தான் கட்டிப்போட முடியும்?

ஒரு நாள் தன் குட்டித் தம்பியைக் கூப்பிட்டு, ''இதோ, இங்கு உனக்கு வேண்டிய உணவு நிறைய இருக்கிறது. இன் னொரு சந்திரன் தோன்றி மறையும் வரைகூட இது உனக்குப் போதுமானதாக இருக்கும். நீ நமது கூடாரத்துக்குள்ளேயே பத்திரமாக இரு. காணாமல் போன நமது சகோதரனைத் தேடி அழைத்துக் கொண்டு நான் திரும்பி வருகிறேன்'' என்றாள். பாவம் குட்டித் தம்பி மறுக்கவா போகிறான்? மறுக் கத்தான் முடியுமா? சகோதரி கம்பளிப் போர்வையை அணிந்து கொண்டு தனது 'டோமஹாக்'கையும் எடுத்துக் கொண்டு இருண்ட கானகத்தில் புகுந்து மறைந்தாள்.

அவள் இனத்தவர்கள் வசிக்கும் கிராமத்தை அவள் அடை யும் போது அங்கு அவள் அண்ணன் ஒரு பெண்ணை மணந்து கொண்டு சௌக்கியமாக இருப்பதைக் கண்டாள். அவன் இப்போது அக் கிராமத்தில் வீரர்களுக்கு வீரனாக விளங்கி னான். தன்னுடைய குடிசைக்குத் திரும்பிச் செல்ல வேண்டு மென்ற அவசியமும், அவசரமும் அவனுக்கு அப்போது இல்லை. தவிர ஒரு வாலிப வீரன் அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள முன் வந்தான். அவள் நினைவெல்லாம் அவனிடமே லயித்தன. தன் குட்டித் தம்பி கானகத்திலே நதிக்கரை யோரம் உள்ள கூடாரத்திலே தனியாக இருப்பதை அவள் மறந்தே போனாள்.

குட்டித் தம்பி கூடாரத்தில் தன்னந்தனியனாக வாழ்ந்து வந்தான். கொஞ்ச நாட்களுக்கு எல்லாம் நல்லபடியாகவே நடந்தன. அக்கா வைத்து விட்டுப் போன உணவு எத்தனை நாளைக்கு வரும்? அது தீர்ந்த பிறகு மெல்லக் கூடாரத்துக்கு வெளியே வந்தான். கானகத்தினுள்ளே தன் பிஞ்சுப் பாதங் களைக் கொண்டு நடந்தான். பசிக்குப் பழங்களையும், காய்களை

கிருஷ்ணவேணி



யும், கிழங்குகளையும் தேடி அலையலானான். வேனிற்காலம் தேய்ந்தது. ஊதல்காற்று விளையாடலாயிற்று. அத்துடன், ஓநாய்களின் ஊளையும் கலந்து வந்தது. இன்னொரு முறை பனி விழுந்து பூமியை மூடியது. குழந்தைக்குக் குளிர் தாங்க முடியவில்லை. தனிமையும் பசியும் விரட்டின. இரவு வேளைகளில் தனது விக்வாமுக்குள் முடங்கிக் கிடப்பான். சில வேளைகளில் மரப் பொந்துகளும் மறைவிடமாகும் அவனுக்கு. பகல் வேளைகளில் ஓநாய்கள் உணவருந்திவிட்டுச் சென்ற மீதியைத் தேடி அலைவான், பசியைத் தணித்துக் கொள்ள.

மனித சஞ்சாரமே இல்லாத காடு. உறவுகொள்ளவோ, ஒட்டிப் பழகவோ மனிதர்கள் யாருமில்லை. கொல்லும் தனிமையைப் போக்க ஓநாய்களுடன் பழகலானான் குட்டித் தம்பி. ஓநாய்கள் கூட்டமாக வேட்டைக்குக் கிளம்பும்போது இவனும் அவைகளுடன் கலந்து கொள்ளுவான். அவைகளைப் போலவே மரத்துக்கு மரம் ஒளிந்து மறைந்து வேட்டையில் ஈடுபடுவான். வேட்டை முடிவில் ஓநாய்கள் உணவைச் சூழ்ந்து கொண்டு விழுங்கும்போது தனித்திருக்கும் இவனுக்கும் அவை ஒரு பங்கு ஒதுக்கும். இப்படி அவனிடம் ஓநாய்கள் கருணை காட்டியிருக்காவிட்டால் பனியாலும் குளிராலும் பசியாலும் அந்தக் குட்டித் தம்பி என்றைக்கோ இறந்திருக்க வேண்டியவன்.

அந்த ஆண்டு பனிப் பாறைகள் பெருமளவுக்கு உருகின. பெரிய ஏரி நீல நிறமாக மின்னியது. ஓநாய்கள் ஏரிக் கரைக்கு உணவு தேடி விரைந்தன. குட்டித் தம்பியும் அவைகளுடன் சென்றான். இப்போதெல்லாம் அவன் வாழ்வு அவைகளுடனேதான். பளீரென்ற சூரிய வெளிச்சமும் கதகதப்பும் அவனுக்கு இதமாக இருந்தன. ஒரு நாள் அந்த ஏரியில் ஒரு படகு வந்தது. அதைச் செலுத்தியது யார் தெரியுமா? குட்டித் தம்பியின் மூத்த அண்ணன். வீராதிவீரனாக விளங்குபவன். மீன் பிடிப்பதற்காக ஏரியில் படகு வலித்தபடி வந்து கொண்டிருந்தான். அப்போது, ஏரிக் கரையை அடுத்த பைன் மரக் காடுகளிடையேயிருந்து ஒரு குழந்தைக் குரல் கணீரென்று பாட்டாக ஒலித்தது.

''அண்ணாவே! ஓ, என் அருமை அண்ணாவே! நான் ஓநாய்ப் பையனாக மாறிக் கொண்டு வருகிறேன். விரைவிலேயே நான் ஓநாயாகி விடுவேன்!''

பாட்டின் முடிவில் அக்குரல் ஓநாயின் ஊளையாக மாறி ஓலமிட்டது.

அப்போதுதான் அந்த அண்ணனுக்குத் தன் குட்டித் தம்பியின் நினைவு வந்தது. அவமானத்தினால் உடல் குன்றியது. ஏக்கமும் பீதியும் நெஞ்சைப் பிளந்தன. தன் பெற்றோருக்குத் தான் சத்தியம் செய்து கொடுத்ததை எண்ணினான். ஒரு காலத்தில் குட்டித் தம்பியிடம் தான் வைத்திருந்த வாஞ்சையை எண்ணிப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கின. பைன் மரக் காட்டை நோக்கி ஓடினான். பரபரப்புடன், 'தம்பி, குட்டித் தம்பி, ஓடி வா, என்னிடம் ஓடிவா!'' என்று கூவி அழைத்தான். ஆனால் குட்டித் தம்பி இப்போது பாதி ஓநாயாகவே மாறிவிட்டிருந்தான். செவ்விந்திய மொழியில் பாடக்கூட அவனால் முடியவில்லை. குட்டித் தம்பியின் குரல் ஓநாயின் ஊளையாகத்தான் இருந்தது.

உரக்க, உரக்க வேதனை பிழிந்தெடுக்கும் குரலில் பெரிய அண்ணன் கூவி அழைத்தான். ''தம்பி! என் அருமைக் குட்டித் தம்பி, ஓடிவா! உன் அண்ணனிடம் ஓடி வந்துவிடு.'' அவன் எவ்வளவு உரக்கக் கூப்பிட்டானோ, அதே வேகத்தில் குட்டித் தம்பியும் செவ்விந்திய வேட்டைக்காரரால் விரட்டப்பட்ட ஓநாயைப் போல் வேக வேகமாகக் காட்டுக்குள் ஓடிப் பதுங்கினான். தன் சகோதர ஓநாய்களுக்கிடையே அவைகளின் அரவணைப்பையும் பத்திரத்தையும் நாடி ஓடினான். அவன் ஓட ஓட அவன் உடல் ரோமம் மண்டிய ஓநாயின் உடலாக மாறியது. சிறிது நேரத்தில் இரு கைகளையும் கீழே ஊன்றியபடி ஓநாய்களைப் போலவே பயங்கரமாக ஊளையிட்டுக் குரைக்கவும் செய்தான். குட்டித் தம்பி இப்போது முழுவதும் ஓநாயாகவே மாறிப் போனான்.

வெட்கமும் வேதனையும் குத்தியெடுக்கப் பெரிய அண்ணன் தன் படகுக்குத் திரும்பி வந்தான். தான் அன்பு காட்டாமல், பராமரிக்காமல், சொன்ன சொல்லைக் காப்பாற்றாமல் கைவிட்டதனால் தன் குட்டித் தம்பி ஓநாயாக மாறியதை எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டபடி கிராமத்துக்குத் திரும்பினான். தன் சகோதரியிடம் இதைக் கூறியபோது அவளும் கலங்கினாள்; கண்ணீர் விட்டாள். தங்கள் சுகமே பெரிதென்று தங்களால் கைவிடப்பட்ட தம்பியை எண்ணி அவ்விருவரும் வாழ்நாளெல்லாம் வேதனைப் பட்டுக் கொண்டே இருந்தார்கள். இப்போது படும் வேதனை ஓநாயாகி விட்ட அவர்களின் குட்டித் தம்பியை மனிதனாக மாற்றிவிடுமா என்ன?

தெரிஞ்சுக்கோ :

இரும்பு, எஃகு, கலப்பு உலோக இரும்பு....

பூமியில் உள்ள மண்ணில் பல பொருள்கள் இருக்கின்றன என்று உனக்குத் தெரியும். அந்தப் பல வகைப் பொருள்களில் இரும்பும் ஒன்று. சில இடங்களில் உள்ள மண்ணில் இரும்பு அதிகமாக இருக்கும். இப்படி இரும்பு அதிகமாக உள்ள பூமியை இரும்புத் தாதுக்கள் நிறைந்த இடம் என்கிறோம்.

இரும்பு என்ற உலோகம் இப்படிப்பட்ட இரும்புத் தாது நிறைந்த மண்ணிலிருந்துதான் பிரித்து எடுக்கப்படுகிறது. இரும்புத் தாதுவிலிருந்து இரும்பை மட்டும் பிரித்தெடுக்கும் இடத்துக்கு இரும்புத் தொழிற்சாலை என்று பெயர். இரும்புத் தாது நிறைந்த மண்ணை இதற்கென உருவாக்கியுள்ள உலைகளில் போட்டுச் சூடாக்குவார்கள். அப்போது இந்த 'ஓரி'ல் உள்ள மற்ற அந்நியப் பொருள்களெல்லாம் எரிந்து போய்விடும். கோக் என்ற கல்கரியின் தன்மை பற்றிப் படித்திருக்கிறீர்களில்லையா? இரும்புத் தாதுவை இந்தக் 'கோக்' நிலக்கரியின் இடையே வைத்துப் பெரிய உலைகளில் இட்டு எரிய விடுவார்கள். கோக் எரிந்தால் ஏற்படும் உஷ்ணம் எத்தகையது என்று உங்களுக்குத் தெரியும். தாங்க முடியாத உஷ்ணம் ஏற்படும். அந்த உஷ்ணத்தில் இரும்பு கலந்த மணல் உருகும். கழிவுப் பொருளை உலையின் மறுபக்கமாக அப்புறப்படுத்தி உருகிய இரும்பை வேறு வழியாக வெளியேற்றுவார்கள். இதுதான் 'ஸ்மெல்டிங் அயர்ன்' (தேன் இரும்பு). இரும்புத் தாதுவிலிருந்து உருக்கி எடுத்த இரும்பு சிவந்த நிலையில் இருக்கும் போதே அதைச் சம்மட்டி கொண்டு அடித்துப் பல்வேறு அமைப்புக்களாக உருவாக்கலாம்.

எஃகு எப்படி உருவாக்கப்படுகிறது ?

தேன் இரும்பிலிருந்து எஃகை (உருக்கு இரும்பு) உருவாக்குகிறார்கள். தாதுவிலிருந்து இரும்பை உருக்கிப் பிரித்த பிறகு இந்தத் தேனிரும்பை இன்னும் அதிகமாகக் காய்ச்சுகிறார்கள். இப்படி இதை உருக்கும்போது இதனுள்ளே பிராண வாயுவைச் செலுத்துகிறார்கள். இந்தப் பிராண வாயு இதில் மீதம் இருக்கும் கழிவுப் பொருள்களையும் எரிக்கச் செய்கிறது. இக்கழிவுப் பொருள்களில் சில வாயுக்களாகவும் மாறுவதற்கு இக்காற்று உதவுகிறது.


எஃகை உருக்குவதற்கு விசேஷமான உலைக்களம் தேவை. எஃகை உருவாக்கும் கலைஞருக்குக் கொதிக்கும் தேன் இரும்பில் செலுத்த வேண்டிய பிராணவாயுவின் அளவு தெரியும். இதற்கு பிளாஸ்டிங் (Blasting) என்று பெயர். பிளாஸ்டிங் முடிந்ததும் எஃகுக் குழம்பை அதற்கென அமைந்துள்ள வாய்க்கால்களில் கவிழ்ப்பார்கள். வாய்க்கால் வழி ஓட நீளும் எஃகைக் குளிருமுன் உருட்டுவார்கள் பல முறை. இந்த நிலையில் இதிலுள்ள இன்னும் சில அழுக்குகள் அகலும். தேனிரும்பைவிட எஃகு (உருக்கிரும்பு) உறுதியானது. உடையாமல் இதை வளைக்கலாம். எஃகைச் சம்மட்டியால் அடித்து விதம் விதமான உருவங்களாகச் சமைக்கலாம்.

இரும்போடு வேறு பல உலோகங்களைக் கலந்து கலப்பு இரும்பு உலோகங்கள் தயாரிக்கிறார்கள். துருப்பிடிக்காத யந்திர பாகங்களை உருவாக்குவதற்கு இத்தகைய இரும்புக் கலப்பு உலோகங்கள் பயன்படுகின்றன.

உன் வீட்டில் உள்ள இரும்புப் பொருள்களை யெல்லாம் — கத்திகள், ஆணிகள், அரிவாள், பூட்டு, கடப்பாரை, மண்வெட்டி— ஒரு நோட்டம் விடு: இரும்பாலானவை எது, எஃகால் ஆனவை எவை என்ற இனம் பிரித்துப் பார்.




சரக்குகளின் நிறை என்ன?



☐ ஒரு பெரிய கப்பல் துறைமுகத்துக்குள் வந்து நங்கூரமிட்டு நின்றது. அது உணவு தானியக் கப்பல். கப்பலில் இருபத்தைந்து படகுகள் இருந்தன. தானியங்களைக் கப்பலிலிருந்து கரைக்குக் கொண்டு செல்ல உதவுவது இப்படகுகள்தான். ஒவ்வொரு படகும் மூன்று முறைகள் சரக்குகளை ஏற்றிச் சென்று கப்பலைக் காலி செய்தன. இப் படகுகள் ஒவ்வொன்றும் அவை சுமந்து சென்ற நிறையைவிட 160 டன்கள் அதிகமாகச் சுமக்கத்தக்க வசதி பெற்றிருந்தால் இப்படகுகள் ஒவ்வொன்றும் ஒரு தடவை மட்டும் சரக்குகளை ஏற்றிச் சென்றால் போதும்; கப்பல் காலியாகி இருக்கும். அப்படியானால் கப்பல் கொள்ளக்கூடிய சரக்குகளின் நிறை என்னவாக இருக்கும்? ✲

வழிகாட்டி



☐ கிட்டு வாழையூர் கிராமத்துக்குப் புதிசு. அவன் சித்தப்பா வீட்டுக்கு விடுமுறைக்கு வந்திருந்தான். பொழுது போகவில்லை. ஆகவே வீட்டிலிருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு பத்து மைலில் இருந்த காட்டுப்பட்டிக்குக் கிளம்பினான். அங்கு அவன் மாமா இருந்தார். கொஞ்ச தூரம் போனதும் சாலை நான்காகப் பிரிந்தது. ஆனால் கைகாட்டி மரம் பெயர்ந்து கீழே சாய்ந்து கிடந்தது. இரவிலே கண் மண் தெரியாமல் வந்த லாரியின் வேலையாக இருக்கும். கைகாட்டி மரம் உடைந்து போகவில்லை. ஆனால் தாறுமாறாக விழுந்து கிடந்த அதிலிருந்து அவன் போக வேண்டிய காட்டுப்பட்டிக்கு எந்தப் பாதை என்பதை அது தெரிவிக்க முடியாத நிலையில் இருந்தது. கிட்டு புத்திசாலி. ஒரு நிமிஷம் யோசித்தான். பிறகு சரியான பாதையில் சைக்கிளை விட்டுக் கொண்டு காட்டுப் பட்டிக்குப் போனான். எப்படி? ✲

கீதாவும் சீதாவும்



☐ அதிகாலை ஐந்து மணி இருக்கும். பூஜைக்குப் பூப் பறிக்கச் சீதா கிளம்பியபோது எதிரே கீதா எங்கோ போவதற்கு ஆயத்தமாக வந்து கொண்டிருந்தாள். ''எவ்வளவு தூரம்?'' என்று கேட்டாள் சீதா கீதாவை. கீதா கொஞ்சம் அழுத்தக்காரி. ''நீயே யூகித்துக் கொள்ளேன்'' என்றவள் இக் குறிப்பைக் கொடுத்தாள்.

''நான் மணிக்கு நாலு மைல் வேகத்தில் சென்றால் நான் போக வேண்டிய இடத்துக்கு ஐந்து நிமிஷங்கள் தாமதமாகப் போய்ச் சேருவேன். ஆனால் மணிக்கு ஐந்து மைல் வேகத்தில் நடந்தேனானால் நான் போக வேண்டிய இடத்துக்குப் பத்து நிமிஷங்கள் முன்னதாகப் போய்விடுவேன்.''

சீதாவும் கெட்டிக்காரி. அவள் எவ்வளவு தூரம் போகப் போகிறாள் என்பதை ஊகித்துக் கொண்டுவிட்டாள். உங்களால் முடிகிறதா, ஊகிக்க? ✲

எத்தனை வாத்துக்கள்?



☐ காத்தான் சந்தையில் விற்பதற்காகத் தன் வாத்துக்களை ஓட்டிச் சென்றான். ஒரு வாத்துக்கு முன்னால் இரண்டு வாத்துக்களும் முன்னால் போகும் வாத்துக்குப் பின்னால் இரண்டு வாத்துக்களும் நடுவில் ஒரு வாத்தும் சென்றன என்றால் காத்தான் சந்தைக்கு ஓட்டிச் சென்றது எத்தனை வாத்துக்கள்? (இப் படத்திலுள்ள வாத்துக்களுக்கும் இக் கணக்குக்கும் சம்பந்தமில்லை!) ✲

(தெரியாதவர்களுக்கு விடைகள்: 26-ம் பக்கம் பார்க்க)

உழைப்பா, அதிர்ஷ்டமா?

வாண்டு மாமா

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே பாக்தாத் நகரத்தில் ஹாருன் அல் ரஷீத் என்பவர் காலிஃப் ஆக இருந்தார் காலிஃப் என்றால் மன்னன் என்று பொருள்

ஒரு நாள் இரவு காலிஃபுக்குத் தூக்கம் வரவில்லை. அது புழுக்கமான இரவு. பஞ்சு மெத்தையில் இப்படியும் அப்படியும் புரண்டார். ஆனால் தூக்கம் வரவேயில்லை. உடம்பு வலித்தது. சிந்தனை நெற்றிப் பொட்டில் 'பட் பட்' என்று தாளமிட அமைதி இழந்த அரசர் படுக்கையிலிருந்து எழுந்தார். இனி அவரால் படுக்கையில் இருக்க முடியாது. அரண்மனையிலேயே காலிஃபின் நண்பரும் வஸீருமான முதியவர் இருந்தார். ரஷீத் அவர் அறைக்குப் போனபோது வஸீரும் தூக்கமில்லாமல் தம்மைப் போலவே அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்.

''உங்களுக்கும் தூக்கம் வரவில்லையா? அப்படியானால் கிளம்புங்கள். காற்றாட வெளியில்போய்ச் சுற்றிவிட்டு வரலாம்'' என்றார் காலிஃப். மன்னரின் விருப்பத்துக்கு மகிழ்ச்சியுடன் இணங்கினார் வஸீர். உடனே இருவரும் வியாபாரிகளைப் போல் உடையணிந்து அரண்மனையை விட்டு நகரத்து வீதிகளில் நடக்கலானார்கள். இவர்களைப் போலவே பலர் தெருவில் சாவதானமாக நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களும் புழுக்கம் தாளாமல்தான் இப்படிக் காற்றுக்காகக் கால்வாற நடந்து கொண்டிருக்கிறார்களோ? காலிஃபையும் வஸீரையும் யாரும் இனம் கண்டு கொள்ளவில்லை.

கொஞ்ச தூரம் போனதும் நகரின் கிழக்குக் கோட்டை வாசலுக்கு வந்தார்கள். அப்போது ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் அவர்கள் மீது மோதிக் கொண்டான். உடனே, ''ஐயா, இந்தக் கபோதிக்கு உங்கள் கையால் ஏதாவது தருமம் செய்யுங்களய்யா!'' என்றன அவன் உதடுகள். நிற்காமலே, அவனைப் பார்க்காமலே காலிஃப் அவன் விரித்த கையில் ஒரு வெள்ளிக் காசை வீசி விட்டு நடக்கலானார். ஆனாலும் அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் எப்படியோ அவர் கையைப் பிடித்துக் கொண்டு விட்டான்.

''ஐயா, இந்த ஏழையின் இன்னும் ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் நிறைவேற்றுங்கள். என் காதைப் பிடித்துத் திருகுங்கள்'' என்று வேண்டிக்கொண்டான் அவன்.

காலிஃபுக்கு வியப்பான வியப்பு, இப்படியும் ஒரு வேண்டுகோளா என்று. ஆனால் அவர் அந்தப் பிச்சைக்காரனின் விருப்பத்துக்கு இணங்கவில்லை. அவனும் விடுவதாக இல்லை. அவர்களைத் தொடர்ந்து கொண்டே இருந்தான்.— தன் காதுகளைப் பிடித்துத் திருகத்தான் வேண்டும் என்று வேண்டியபடி. இதனால் எரிச்சல் அடைந்த காலிஃப் கடைசியில் அவன் விருப்பப்படியே செய்தார். அவனும் திருப்தியடைந்தவனாக மகிழ்ச்சியோடு திரும்பித் தன் வழியே நடந்தான். இதைக் கண்ட காலிஃபுக்கும் வஸீருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

கொஞ்ச தூரம் போனதும் அவர்கள் முன்னே ஒரு கம்பீரமான பெரிய மாளிகை — அரண்மனையின் அழகையும் மிஞ்சும்படியாக — தென்பட்டது. நிச்சயம் அதில் யாரோ ஓர் அரசர்தான் வசிக்க வேண்டும். நம் நாட்டில் நமக்குத் தெரியாமல் அது எப்படிச் சாத்தியம் என்று குழம்பி நின்றார் காலிஃப். உடனே வஸீர் அவ்வழியே போன ஒரு முதியவரிடம் அக்கட்டிடத்தைப் பற்றிக் கேட்டார்.

''இந்த மாளிகை யாருடையதென்று தெரியாதா உங்களுக்கு?'' என்றான் வழிப்



போக்கன் வியப்புடன். ''கயிறு தயாரிக்கும் காஸிமுடைய மாளிகை இது. அவனிடம் உள்ள பொருள் எவ்வளவு என்று அவனுக்கே தெரியாது. அத்தனை செல்வத்தையும் என்ன செய்வது என்றும் தெரியாமல் தவிக்கிறான் அவன்'' என்று கூறிப் போய்விட்டான் அந்த வழிப்போக்கன்.

''இது இன்னும் மர்மமாக இருக்கிறதே. கயிறு திரித்து விற்று ஜீவனம் செய்பவர்கள் எல்லாம் பரம ஏழைகளாகவல்லவோ இருப்பார்கள்? ஆனால் இந்தக் காஸிமோ இத்தனை பணக்காரனாக இருக்கிறானே, இது எப்படி?'' என்று வியந்தபடியே மன்னரும் மந்திரியும் அரண்மனைக்குத் திரும்பினார்கள்.



மறு நாள் காலை காலிஃப் அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனையும் பணக்காரனையும் அரண்மனைக்கு அழைத்து வரச் செய்து வரவேற்று உபசரித்த பின் அவ்விருவரும் தங்கள் தங்கள் கதையைக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

குருட்டுப் பிச்சைக்காரன் முதலில் தன் கதையைக் கூறலானான்:

''என் குடும்பம் ஏழைக் குடும்பம் தான். ஆனாலும் தளராத உழைப்பினாலும் பொருள்களை அங்கு மிங்கும் வாங்கி இந்தியாவுக்குச் சென்று வர்த்தகம் செய்து பணக்காரனானேன். ஒரு தடவை இப்படிச் சரக்குகளைக் கொண்டு போய் விற்றுவிட்டு என் ஒட்டகங்களுடன் திரும்பிக் கொண்டிருக்கும்போது வழியில் ஒரு சந்நியாசியைச் சந்தித்தேன். அவரிடம் ஏராளமான நகைகள் இருந்தன. கண்ணையும் கருத்தையும் கவரும் அந்த மாதிரியான அற்புத அணிமணிகளை நான் கண்டதே இல்லை. ''ஐயா! இத்தனை விலையுயர்ந்த நகைகள் தங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன?'' என்று கேட்டேன். அவர் மௌனமாகத் தன்னிடமிருந்த ஒரு சிறு பேழையைத் திறந்து காட்டினார். அதனுள் ஏதோ ஒரு மை இருந்தது. இதன் மகிமையினால்தான் இவர் இவ்வளவு செல்வத்துக்கும் உரியவராக இருக்கிறார் என்பதை ஊகித்துக் கொண்டேன். அவருடன் வெகு நேரம் பேசி, வழி நடந்து மெள்ள மெள்ள அவர் அன்பையும், நம்பிக்கையையும் பெற்றேன். எனக்கும் அத்தகைய செல்வம் கொட்டிக் கிடக்கும் இடத்தைக் காண்பிப்பதாகக் கூறி அழைத்துப் போனார். வெகு தூரம் பிரயாணம் செய்தோம். மலைமீதெல்லாம் ஏறினோம். குறுகலான வளைந்த பாதைகள் வழியே ஒட்டகங்களுடன் போவது சிரமமாகத்தான் இருந்தது. ஆனாலும் பொருள் ஆசையால் அந்தப் பிரயாணத்தின் துன்பங்கள் எனக்கு உறைக்கவில்லை. முடிவில் ஓர் இருள் சூழ்ந்த கணவாய்க்கு வந்தோம். நெடிதுயர்ந்து நிற்கும் கற்பாறைகளை அந்தச் சந்நியாசி ஆராய்ந்தார். சில பாறைகளைக் கல்லைக் கொண்டு தட்டிப் பார்த்தார். ஓர் இடத்தில் எதையோ அறிந்த அவர் என்னை அழைத்துக் காட்டினார். அங்கு ஒரு கதவு — கல்லால் ஆன கதவு— இருந்தது. மிகுந்த பிரயாசையுடன் இருவருமாக அதைத் திறந்தோம். அத

னுள்ளே ஒரு குகைப் பாதை சென்றது. அதில் இறங்கி நடந்தோம். முடிவில்..?

ஆகா! அந்தக் காட்சியை நான் எப்படி விவரிப்பேன்! விசாலமான ஒரு சமவெளி. அதில் எங்கு பார்த்தாலும் வெள்ளியும், தங்கமும், வைர வைடூரியங்களும் நகைகளும் ஆபரணங்களும் அணிகளும் கொட்டிக் குவித்து வைக்கப்பட்டிருந்தன. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன். கனவல்ல... நினைவுதான். வேண்டியமட்டும் அள்ளிக்கொள்ளும்படி உத்தரவு தந்தார் அந்தத் துறவி. வெறியனைப் போல ஓடி ஓடி என் ஒட்டகங்களில் மூட்டை மூட்டையாகக் கட்டி ஏற்றினேன். அந்த மிருகங்களால் நகரவும் முடியவில்லை. ஒரு வழியாக அரை மனத்துடன் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினேன். குகையின் வாயிலை சந்நியாசி மூடினார். அது இருந்ததாகவே தெரியாதபடி மறைந்து போயிற்று.

அவரும் நானும் கொஞ்ச தூரம்தான் போயிருப்போம். என் மனத்தில் குரூரமான ஆசை தலை தூக்கியது. அவரைக் கூப்பிட்டேன். அவருடன் பேசவேண்டும் என்று சொன்னேன். அவரும் ஓர் இடத்தில் நின்றார். ''ஐயா! தங்களைப் பார்த்தால் முற்றும் துறந்த துறவியாகத் தெரிகிறது. நீங்கள் நடத்திச் செல்லும் ஒட்டகங்களில் உள்ள செல்வம் உங்கள் பிரார்த்தனைக்கு இடைஞ்சலாக இருக்காதோ?'' என்றேன். அவரும் நான் ஆசைப்பட்டபடியே தம் ஒட்டகங்களையும் அவற்றின் சுமையோடு எனக்கு அளித்து விட்டார். எனக்கு ஆனந்தம் தாளவில்லை. அதுமட்டுமல்லாது துறவி தம்மிடமிருந்த அந்தச் சிறு பேழையை நீட்டி, 'இதில் உள்ள மையை உனது இடது கண்ணில் தடவிக் கொண்டால் இவ்வுலகில் மறைந்து கிடக்கும் புதையல்களெல்லாம் உன் கண்களுக்குத் தெரியும். அதே சமயத்தில் இந்த மையை வலது கண்ணிலும் தடவிக்கொண்டால் விபரீதம்தான் விளையும்' என்று எச்சரித்தபடி அதை என்னிடம் கொடுத்தார். என்னுடைய ஒட்டகங்கள், அவருடைய ஒட்டகங்கள் இத்தனையிலும் மூட்டை மூட்டையாகப் பொன்னையும் பொருளையும் ஏற்றியிருந்தும் ஏனோ எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. புதையல் உள்ள இடங்களையெல்லாம் அறிந்து கொள்ளும் ஆவலுடன் இடது கண்ணில் அந்த மையைத் தீட்டிக்கொண்டேன். ஆகா! எத்தனை எத்தனை புதையல்கள்? பூமியின் மூலை முடுக்குகளில் உள்ள செல்வங்கள் எல்லாம் என் கண்களுக்குத் தெரிந்தன. அப்படியும் என் பேராசை தீரவில்லை. ஒரு கண்ணுக்கு மைதீட்டிக் கொண்டாலே இவ்வளவு தெரிகிறதே, மற்றொரு கண்ணிலும் தீட்டிக்கொண்டால் என்ன? அப்படி என்ன விபரீதம் நிகழ்ந்து விடப் போகிறது என்ற பேராசையின் உந்துதலால் அந்தப் பெரியவரின் எச்சரிக்கையை உதாசீனம் செய்து வலது கண்ணிலும் மையைத் தீட்டிக் கொண்டேன். ஐயோ, எப்படிச் சொல்லுவேன்! என் இரு கண்களின் பார்வையும் பறிபோய் விட்டன. குரு



டன் ஆனேன். என்னை இருள் சூழ்ந்து கொண்டது. கத்தினேன். கதறினேன். என்னை மன்னிக்கும்படி கெஞ்சி அழுதேன். ஆனால் அந்தச் சந்நியாசியிடமிருந்து பதிலே வரவில்லை. ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு அவர் போவதை மட்டும் என் காதுகள் உணர்ந்தன.

பார்வை இழந்து, பற்றிழந்து, பொருள் இழந்து, தனியனாக அந்தப் பாலைவனத்தில் பராரியாகக் கிடந்தேன். அப்பக்கமாக வந்த வியாபாரிகள் சிலர் என்னிடம் இரக்கம் கொண்டு என்னைக் காப்பாற்றிப் பாக்தாத் நகரத்துக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அன்று முதல் உயிர் வாழ, பசி தீர்க்கப் பிச்சை எடுத்து வருகிறேன். பிச்சை போட்டவரை நான் என் காதுகளைப் பிடித்துத் திருகும்படி வேண்டிக்கொள்வேன். ஏனென்றால் அதிக ஆசைப்பட்டேனில்லையா, அந்தப் பேராசையின் விளைவுதானே என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது. அதற்கு இந்தத் தண்டனை மட்டும் போதும் என்று நினைக்கவில்லை. அதனால்தான் பிச்சையிடுபவரின் கையினால் காது கிள்ளப்படுவதையும் விரும்புகிறேன்'' என்று தன் கதையைக் கூறி முடித்தான்.

காலிஃப் அவன் கூறியதைக் கேட்டு வியப்பும் வேதனையும் அடைந்தார்.

அடுத்துக் கயிறு வியாபாரி தன் கதையைக் கூறலானான்:



“என் கதை இத்தனை சோகமானதல்ல. ஒரு காலத்தில் நானும் ரொம்ப ரொம்ப ஏழையாகத்தான் இருந்தேன். இந்த நகரின் ஒரு மோசமான சின்னச் சந்தில் என் கடை இருந்தது. தினமும் கடை வாசலில் உட்கார்ந்து கொண்டு கயிறு வாங்க வரும் வாடிக்கைக்காரர்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ரொம்பக் கஷ்டமான ஜீவனம். எனக்கும் என் மனைவிக்கும் அரை வயிற்றுக்குக்கூட அந்தக் கயிறு வியாபாரத்தில் கிடைக்கவில்லை.


ஒரு நாள் நான் என் வழக்கமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது இரண்டு பேர் என் கடையை நோக்கி வந்தார்கள். அவர்கள் சகோதரர்களைப் போல் இருந்தார்கள். என்னை நாடி, என்னுடன் பேசத்தான் வருகிறார்கள் என்பதை அறிந்தபோது எனக்கு மகிழ்ச்சியும் வியப்புமாக இருந்தது. அவர்கள் என்னிடம் வந்த காரணம் அப்போது எனக்குத் தெரியாது. பின்னால்தான் புரிந்துகொண்டேன். அவர்களுக்குள் ஒரு விவாதம். மனிதன் செல்வந்தனாவது எப்படி? உழைப்பினாலா, அதிர்ஷ்டத்தினாலா? என்பதே அவர்கள் தர்க்கம். இதைப் பரிசோதித்துப் பார்க்க நிச்சயித்தார்கள் அவ்விருவரும். ஓர் ஏழைக்குக் கொஞ்சம் பொருளைக் கொடுக்க வேண்டியது. கொஞ்ச நாட்கள் கழித்து அந்தப் பொருளைக் கொண்டு அவன் எப்படி மாறி இருக்கிறான், வாழ்கிறான் என்று பார்க்க வேண்டியது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதெல்லாம் அவர்கள் என்னிடம் கூறவில்லை. பின்னால்தான் நானாக இவைகளை உணர்ந்து கொண்டேன். பரிசோதனைக்கு உரிய ஏழையாக என்னைத் தேர்ந்தெடுத்து என்னிடம் வந்த அவர்கள், காரணம் ஏதும் கூறாமல், பொற்காசுகள் நிறைந்த ஒரு பையை எனக்குக் கொடுத்தார்கள். என் நிலை அப்போது எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்! மகிழ்ச்சி பயம், தவிப்பு. இத்தனையுமாக—பணத்தைக் கொடுத்து விட்டுப் பேசாமல் போகும் அவர்களையே பார்த்துக் கொண்டு சில விநாடிகள் சிலையாக நின்றேன். பிறகு சட்டென்று கடையைச் சாத்திவிட்டு வீட்டை நோக்கி ஓடினேன் குறுக்குப் பாதையில். அப்போதும் என் பயம் நீங்கவில்லை. பணம் கொடுத்த அவ்விருவரும் என்னைத் துரத்திக் கொண்டு வருகிறார்களோ என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடினேன்.

எப்படியோ வீட்டை அடைந்தேன் பத்திரமாக. மூச்சு இரைத்தது. பணம் கிடைத்த விஷயத்தை மனைவியிடம் சொல்ல விரும்பவில்லை. சொன்னால் அவள் அத்தனை பணத்துக்கும் செலவு கூறி ஒரு பட்டியலே தயாரித்து விடுவாளே. ஆனாலும் இத்தனை விரைவில் கடையை மூடிக் கொண்டு வந்த என்னைக் கண்டு அவள் வியந்தாள். எனக்கு உடல் நலமில்லை என்று கூறினேன் அவளிடம். 'அப்படியானால் மாடிக்குப் போய் ஓய்வாகப் படுத்திருங்கள்' என்றாள் என் மனைவி.

அவளுக்காக ஓய்வெடுப்பது போல் பாசாங்கு செய்தபடி கிடைத்த பணத்தை எங்கு மறைத்து வைப்பது என்பது பற்றியே சிந்தனை செய்தேன். அதற்கு முன்பு அத்தனை பணத்தை நான் கண்டதே யில்லை. கடைசியில் அந்தப் பொற்காசுகள் கொண்ட பையை என் தலைப்பாகைக்குள்ளேயே வைத்துக் கொள்வதென்று முடிவு செய்தேன். இதனால் அது எப்போதும் என் தலையிலேயே இருக்கும். இரவு படுக்கும் போது தலைப்பாகையைத் தலையணைக் கடியில் வைத்துக் கொள்ளலாம்.

இந்த முடிவுக்கு வந்ததும் பையிலிருந்து அப்போதைய செலவுக்குச் சில நாணயங்களை எடுத்துக் கொண்டு மற்றதை என் தலைப்பாகையினுள் பத்திரப்படுத்திக் கொண்டேன். மனைவிக்குச் சந்தேகம் ஏற்படாதிருக்க கொஞ்ச நேரம் மாடியிலேயே இருந்துவிட்டுக் கீழே வந்தேன். கடை வீதிக்குப் போய் அன்று சாப்பாட்டுக்கு இறைச்சி வாங்கலா மென்று கிளம்பினேன்.

கூட்டம் மிகுந்த கடை வீதியில் யாரைக் கண்டாலும் எனக்குச் சந்தேகமாக இருந்தது. அடிக்கடி தலைப் பாகையைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுவேன் — அது தலையில் இருக்கிறதா என்று. இறைச்சி வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன். வீட்டுக்குச் சமீபமாக வந்திருப்பேன். தலைக்கு மேலே ஏதோ பறப்பது போலிருந்தது. ஒரு பெரிய கழுகு என் கையிலுள்ள இறைச்சிப் பொட்டலத்தைப் பார்த்து விட்டு அதைப் பறிப்பதற்காக ஆகாயத்திலிருந்து பாய்ந்து வந்து கொண்டிருந்தது. அதனிட மிருந்து தப்ப நான் பெரு முயற்சி செய்தேன். அதுவும் என்னிடமிருந்து இறைச்சியைப் பறிக்க



உக்கிரமாகப் போராடியது. அதன் தாக்குதலிலிருந்து விடுபட நான் முயன்ற போது என் தலைப் பாகை நழுவியது. கடைசி முயற்சியாகக் கழுகு இறைச்சியைப் பறிக்கப் பாய்ந்த அதன் கால்களில் என் தலைப் பாகை சிக்கிக் கொள்ளவே அத்துடன் அது பறந்து செல்லலாயிற்று. என் நிலை எப்படி இருக்கும்? எதிர்பாராது கிடைத்த புதையல் இப்படிப் பறிபோய் விட்டதே என்று ஏக்கத்துடன் கழுகு என் தலைப்பாகையுடன் மேலே பறந்து போவதைப் பார்த்தபடியே நின்றேன்.

வீட்டுக்குப் போய் மனைவியிடம் நடந்ததைக் கூறியபோது என்னைப் போலவே அவளும் ஏமாற்றத்தால் இடிந்து போனாள்.

மறுநாள் அதே ஏழைக் கயிறு வியாபாரியாகக் கடை வாசலில் அமர்ந்திருந்தேன். அந்தச் சகோதரர்கள் இருவரும் அன்றும் வந்தார்கள். நடந்ததை அவர்களிடம் கூறினேன். அவர்கள் எனக்கு அன்றும் ஒரு பை நிறையப் பொற்காசுகளைக் கொடுத்தார்கள். என் வியப்புக்கு எல்லையே இல்லை. அந்தப் பணத்துடன் வீட்டுக்கு ஓடினேன். மனைவி வீட்டில் இல்லை. ஏதோ காரியமாக வெளியே போயிருந்தாள். இந்தத் தடவை கிடைத்த செல்வத்தை இழக்கக்கூடாதென்று வீட்டிலிருந்த ஒரு பழங்காலத்துப் பாண்டத்தினுள் அதைப் பத்திரப்படுத்திவிட்டுச் சந்தைக்கு உணவுப் பொருள் வாங்கி வரப் போனேன்.

நான் இல்லாத சமயத்தில் வீடு திரும்பியிருக்கிறாள் என் மனைவி. அதே

சமயம் பழைய சாமான்களை வாங்கிக் கொள்ளும் வியாபாரி ஒருவனும் தற்செயலாக வந்திருக்கிறான். வீட்டில் உணவுக்குக் காசில்லாத நிலைமையில் ஏதாவது பழைய பண்டங்களைப் போட்டுப் பணம் பெறலாமே என்ற நோக்கில் என் மனைவி நான் பணம் ஒளித்து வைத்திருந்த பாண்டத்தை அதனுள் என்ன இருக்கிறது என்று பார்க்காமலேயே — பார்க்க வேண்டிய அவசியமும் இல்லையே — அந்த வியாபாரியிடம் போட்டுச் சில காசுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறாள், அன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்க்க. சந்தையிலிருந்து வீடு திரும்பிய நான் நடந்ததை அறிந்து இடிந்து போனேன். இந்தத் தடவை என் மனைவிக்கு என்மீது கோபம் கூட. பொன்னையும் பொருளையும் வைக்க வேறு இடமா கிடைக்கவில்லை என்று சீறினாள்.

நடைப் பிணமாக மறுநாள் கடையைத் திறந்தேன். அன்றும் அவ்விரு சகோதரர்களும் வந்தார்கள். எனக்கு ஏற்பட்ட இழப்பை அவர்களிடம் கூறிய போது அவர்கள் என்னைப் பொய்யன் என்று மதித்து அற்பமாகப் பார்த்தார்கள். அவர்கள்மீது தவறில்லைதான். வெறுப்போடு என் மடியில் ஒரு தாமிரக் காசை வீசி எறிந்துவிட்டுப் போனார்கள், நான் கொடுத்து வைத்தது இதற்குத்தான் என்கிறபடி.

அன்று மாலை என் பக்கத்து வீட்டுக்காரன் — அவன் ஒரு மீனவன் — மீன் பிடிக்கத் தூண்டிலுக்கு உணவு வாங்க என்னிடமிருந்து அந்தத் தாமிரக்காசைக் கடனாக வாங்கிப் போனான். அதற்காக நன்றி தெரிவிக்கும் முகமாகத் தான் பிடித்த முதல் மீனை எனக்குப் பரிசாகவும் கொடுத்துப் போனான். என் மனைவி அந்த மீனைப் பக்குவம் செய்யச் சமையலறையில் அதன் வயிற்றைக் கிறியபோது அதனுள் ஒரு பெரிய வைரம் இருப்பதைக் கண்டு என்னைக் கூவி அழைத்தாள். தகதகவென்று ஒளி வீசிக் கொண்டிருந்த அந்தப் பெரிய வைரத்தை எடுத்துக் கொண்டு ஒரு நகை வியாபாரியிடம் போனேன். நான் நினைத்ததை விட அது அதிக மதிப்பு வாய்ந்ததாக இருந்தது. அவனிடம் பேரம் பேசி ஒரு பெருந் தொகைக்கு அதை விற்றுக் கொண்டு வீடு திரும்பினேன். என் கயிறு வியாபாரத்தைப் பெருக்கினேன். வியாபாரத்தில் ஊக்கம் காட்டி உழைத்தேன். பொருள் குவிந்தது. சமீபத்தில்தான் நீங்கள் கண்ட அந்தப் பெரிய மாளிகையைக் கட்டி முடித்தேன்.

தான் வீசிவிட்டுப் போன தாமிரக் காசினால் நான் உயர்ந்ததைக் கேள்விப்பட்ட அந்தச் சகோதரர்களுக்கு நம்பிக்கையே பிறக்கவில்லை. ஒரு நாள் அடுத்த ஊரிலிருக்கும் என் நண்பன் காட்டில் ஒரு மரத்தில் கழுகு என் தலைப்பாகையில் கூடு கட்டி இருப்பதைக் கண்டு அதைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தான். அதற்குள் நான் மறைத்து வைத்திருந்த பொருள் அப்படியே இருந்தது. அதன் பிறகு என்னுடைய பழைய பாண்டத்தையும் ஒரு தானிய வியாபாரி கொண்டு வந்து கொடுத்தான். அவன் நீண்ட காலமாக எனக்குத் தானியம் விற்பவன். என் வீட்டுப் பாத்திரத்தைப் பழைய சாமான்கள் கடையில் பார்த்தானாம். முன்பு எப்போதோ ஒரு தடவை அவனிடம் ஆகிவந்த அதை என் மனைவி தெரியாமல் விற்றுவிட்டதாகக் கூறியிருந்தேன். அதை நினைவு வைத்துக்கொண்டு அங்கிருந்து அதை வாங்கி வந்து என்னிடம் கொடுத்தான். என்ன ஆச்சரியம்! அதனடியில் அன்று நான் எப்படி அந்தப் பொற்காசுகளை மறைத்தாற்போல் வைத்திருந்தேனோ, அது அப்படியே இருந்தது. அவ்விரண்டையும், அந்தச் சகோதரர்களிடம் காட்டினேன்; அவர்கள் நினைத்ததைப் போல நான் பொய் சொல்லவில்லை என்பதற்காக. அப்போதுதான் அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட வாதத்தைப் பற்றிக் கூறினார்கள். ''நீ சீமானாக ஆனதற்கு உன்னுடைய உழைப்பு, அதிர்ஷ்டம் இரண்டுமே காரணமாக இருந்திருக்கின்றன. ஆகவே எங்களுடைய வாதத்துக்கு அர்த்தமே இல்லாமற் போயிற்று. எப்படியானாலும் நீ சீமானானதற்கு எங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்கள். இதுதான் என்னுடைய கதை'' என்று முடித்தான் கயிறு வியாபாரி காசிம்.

காலிஃப் இருவருடைய கதையையும் கேட்டு மகிழ்ந்தார். கயிறு வியாபாரியின் உழைப்பைப் பாராட்டினார். அன்று முழுவதும் இருவரையும் தம் விருந்தாளிகளாக வைத்திருந்து அனுப்பினார். கயிறு வியாபாரி தம் மாளிகைக்குத் திரும்பினான். குருட்டுப் பிச்சைக்காரன் தன் வழக்கமான கிழக்குக் கோட்டை வாசலுக்குக் கிளம்பினான் பிச்சை எடுக்க. காலிஃப் குருடனிடம் ஒரு பை நிறைய நாணயங்களைக் கொடுத்தார். கூடவே அவன் காதையும் நன்கு திருகி அனுப்பினார்!

குளிர்ச்சியான வீடு

செல்ல கணபதி


வயலைச் சுற்றி வரப்புக்கள்
வரப்பின் ஓரம் நண்டுகள்
முயன்று மண்ணைத் துளைத்ததோ
மூலை வீடும் நிலைத்ததோ!

பசுமை யான பயிர் நிழல்
பக்கம் யாவும் நீர்த்துளி
குளுமை யாக வாழவே
கூடம் தோண்டி வைத்ததோ!

அருமை யாகப் பாடவே
அருகில் உண்டு தவளைகள்
இருந்து பாட்டைக் கேட்கவோ
ஈர மண்ணைத் துளைத்தது.

வளைந்த துளையின் வீட்டிலே
வாசல் கதவும் இல்லையே
நுழைந்து வீட்டைப் பார்க்கவும்
நோக்கம் கொள்வார் இல்லையே!

குளிர்ச்சி யான துளையிலே
கொஞ்சம் தூங்கி மகிழவே
துளிர்க்கும் ஆசை உள்ளவர்
துணிச்ச லோடு நுழையுவீர் !





முன்னொரு காலத்தில்....

லெமன்

குட்டை குட்டை மரங்களாம்
குலுங்கக் குலுங்கப் பழங்களாம்
நெட்டை யான மரங்களே
நெடுநாள் முந்தி இல்லையாம்!

நாலு துஷ்டப் புலிகளாம்
நாளும் வனத்தைச் சுற்றுமாம்
கால்ந கத்தால் பழங்களைக்
கண்ட துண்டம் பண்ணுமாம்.

பறவை தூங்கக் கிளையில்லை
பசிக்குத் தின்னக் கனியில்லை
குறவை ருக்கும் புலிகளைக்
குத்திப் போடத் துணிவில்லை!

பறவை யெல்லாம் கூடின
பலநாள் தவம் செய்தன
'கருணை மிகுந்த கடவுளே,
காக்க வேணும்!' என்றன.

கடவுள் தோன்றிப் பறவைகள்
கஷ்டம் தீர அருளினார்.
உடனே எல்லா மரங்களும்
உயர உயர வளர்ந்தன.


குரப் புலிகள் மரங்களைச்
சுற்றிச் சுற்றி வந்தன.
ஏறத் தெரி யாததால்
ஏமாந்து போய் நின்றன !


கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
ஷீலாவைக் காணோம்
18
ஹெலிகாப்டரில் தொத்திக் கொண்டு ஊசலாடியபடி பேரும் டைகரினால் எத்தனை நேரம்தான் அந்த நிலையில் பிரயாணம் செய்ய முடியும்?
தாங்க முடியாத வலி.. தவிப்பு.. கால்கள் துவண்டன. மேலே போகு ஹெலிகாப்டர் வேகமாகத் திரும்பி இயங்கிய போது டைகரின் பிடி தளர்ந்தது. பொத் தென்று குட்டையாகக் கீழே விழுந்தது...
நல்ல வேளை, அது விழுந்த இடம் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு புல் புதர். அடி பலமில்லை. ஆனால் அதிர்ச்சியில் நினைவிழந்தது..
திருடர்கள் திட்டமிட்டார்கள்.
அண்ணே! இந்த ஹெலிகாப்டரிலேயே நாம தப்பி எங்கும் போயிட முடியாது. போலீஸ் கண்ணிலே மண்ணைத் தூவ ஒரு வேலைத்தனம் செய்யணும். நம்ம குதை கிட்டே நீ இந்தப் பொண்ணோடே இறங்கிக்க. நான் இதை வெகுதூரம் கொண்டு போய் விட்டுட்டு வரேன்.
நல்ல யோசனைதான். ஹெலிகாப்டர் எங்கே இருக்கோ அங்கேதான் போலீஸ் நம்மைத் தேடும். போலீஸுக்குப் போக்குக் காட்ட இது சரியான திட்டம்தான்.


கிட்டப்புடிச் செயல் பட்டார்கள் திருடர்கள். ஒருவன் ஷீலாவுடன் இறங்கிக் கொள்ள, மற்றவனுடன் ஹெலிகாப்டர் கிளம்பியது. அதே வேளையில் மயக்கம் தெளிந்து இவர்களைத் தேடி வந்த டைகர் இவர்களைக் கண்டு விட்டது.
கயவர்களின் ரகசிய இடமான குகைக்குள் ஷீலாவைக் கடத்திப் போட்டு விட்டு வெளியேறினான் திருடர்களில் ஒருவன். தொடர்ந்து வந்த டைகர் குகையினுள் புகுந்தது...
மலைப் பிரதேசக் கிராமத்தில் பூட்டிக் கிடந்த ஒதுக்குப் புறமான ஒரு வீட்டினை, ஜன்னலை நெம்பித் திறந்து உள்ளே இருந்த உணவுப் பொருள்களைச் சுருட்டிக் கொண்டு கிளம்பினான் — திருடன்.
ஷீலாவின் கட்டுக்களை அவிழ்ப்பதில் முனைந்திருந்தது டைகர்.
சீக்கிரம் டைகர். நேரமாகிறதே. அவன் வந்து விடப் போகிறானே. உன்னால் அவிழ்க்க முடியவில்லையா?
ஷீலா பயந்த படியே அவன் திரும்பி வந்தே விட்டான்.
நீ.. நீயா? சாகவில்லையா சனியனே நீ.
ஐயோ.. டைகர்..
தொடரும்..

அண்ணாதுரையை வரைந்து பாருங்களேன்

— தாணு



அடுத்த இதழில் யார்?

மர்மத் தீவு

1722ம் வருஷம். ஒரு கப்பல் பசிபிக் கடலில் மிதந்து போய்க் கொண்டிருக்கிறது. அது ஒரு டச்சுக் கப்பல். கப்பலின் பாய்மரத்து உச்சியின் கூடையில் உள்ள மாலுமி 'லாண்டு ஹோ!' என்கிறான். தூரத்தில் ஏதோ நீர்ப் பரப்புத் தெரிகிறது என்பதை அறிவிக்கும் குறிப்பு அது. கப்பலின் தலைவர் ரோகவீன் தம்மிடமிருந்த வரைபடத்தை ஆராய்ந்தார். அந்தப் பகுதியில் — பசிபிக் கடலில் — எந்த நிலப் பரப்பும் குறிக்கப்படவில்லை.

கப்பல் அந்த நிலப் பகுதியை நெருங்கிற்று. அது ஒரு தீவு. தீவைச் சுற்றி வந்தது கப்பல். சின்னஞ் சிறிய தீவுதான். நாற்பது மைல் சுற்றளவு இருக்கலாம். உத்தேசமாக முக்கோண வடிவிலிருந்தது அத்தீவு. ஒவ்வொரு மூலையிலும் ஒரு மலை.

கப்பல் தலைவரான ரோகவீன் தம் வரைபடத்தில் அந்தத் தீவைக் குறித்துக் கொண்டார். அதன் கீழே ஈஸ்டர் தீவு என்று எழுதினார். ஏனென்றால், அன்று ஈஸ்டர் தினம். ஆகவே அன்று கண்ட அத்தீவுக்கு ஈஸ்டர் தீவு என்றே பெயரிட்டார் அவர். விடுவிக்க முடியாத மர்மங்கள் நிறைந்த ஒரு தீவைத் தாம் கண்டுபிடித்திருக்கிறோம் என்பது அப்போது அவருக்குத் தெரியாது.


ரோகவீன் தம் குறிப்புப் புத்தகத்தில் இப்படி எழுதினார்: இந்தத் தீவின் ஜனத் தொகை ஆறாயிரம் பேர். தீவு முழுவதும் ஏராளமான கற்சிலைகள் காணப்படுகின்றன. எல்லாமே ஆணின் இடுப்பளவு உருவங்கள்.... பெரிய தொள்ளைக் காதுகளுடனும் தலையில் சிவப்புத் தொப்பியுடனும்.

அவருக்குப் பிறகு அந்தத் தீவுக்கு வந்தவர்கள் அத்தீவின் சிலைகளைக் கண்டு அதிசயித்தார்கள். மொத்தம் அறுநூற்றுக்கும் அதிகமான சிலைகள். சிறியது பெரியதாக இருந்தாலும் — பதினைந்திலிருந்து முப்பது அடி வரை உயரம் உடையவை — தோற்றத்தில் எல்லாம் ஒன்று போலவே காணப்படுவதுதான் இச்சிலைகளின் அதிசயத்துக்குக் காரணம். முழு உருவமல்ல. இடுப்பளவு, சில தோள்பட்டை வரைதான் உள்ளன. எவ்வித பாவமும் இல்லாத முகம், சரிந்த நெற்றி, இறுகிய உதடுகள் எடுப்பான முகவாய், மூக்கு நுனியில் ஒரு வளைசல். இவை எல்லாவற்றையும்விட நீண்ட மெலிந்த தொள்ளைக் காதுகள் தாடை வரை தொங்கின. ஒவ்வொரு சிலையும் முண்டாசு அணிந்ததுபோல் சிவப்புக் கல்லில் தொப்பியும் அணிந்திருந்தன.

இந்தத் தீவு பசிபிக் மகாசமுத்திரத்தில் எங்குள்ளது? தென் ஆப்பிரிக்காவின் சிலி நாட்டிலிருந்து கிழக்கே, தாஹித்தி தீவிலிருந்து மேற்கே 2300 மைல்களுக்கு அப்பால் இத்தீவு உள்ளது.

அணைந்து போன ஓர் எரிமலையின் அருகே நூறு சிலைகள் வரை இருக்கின்றன. மற்றவை ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள அத்தீவின் புதை குழிக்குப் போகும் நீண்ட நெடும் பாதையின் இரு பக்கத்திலும் நிறுவப்பட்டிருக்கின்றன. இச்சிலைகளை உருவாக்கிப் பிறகு நிறுவப்பட வேண்டிய இடத்துக்கு இழுத்து வந்து, அங்கு தயாராகத் தோண்டி வைத்துள்ள குழிக்குள் நகர்த்தித் தள்ளி நிறுத்தியிருக்கிறார்கள். ராட்சச வேலைதான். ஒவ்வொரு சிலையும் இருபதிலிருந்து நாற்பது டன்வரை நிறையுடையன.

இந்தச் சிலைகள் யாரைக் குறிக்கின்றன? ஏன் இங்கு இருக்கின்றன? ஒன்றே போலப் பலப்பல சிலைகள் ஏன் இருக்கின்றன? இவைகளை உருவாக்கியது யார்? இந்த வினாக்களுக்கெல்லாம் இன்றுவரை ஆராய்ச்சியாளர்களுக்கு விடை கிடைக்கவில்லை. இந்தச் சிலைகளைத் தவிர கல்வெட்டுக் கற்கள் (பலகைகளாக) இங்கு ஏராளமாகக் கிடந்தன. அதில் என்ன எழுதியிருக்கிறது என்பது



தெரியுமானுல் இந்தச் சிலைகளின் புதிரும் விடுவிக்கப்படும். ஆனுல் அக்கல்வெட்டுப் பாஷை யாருக்குமே தெரியவில்லை. ஆராய்ச்சியாளர்கள் அத்தீவில் வழங்கும் கட்டுக் கதைகளை — நாடோடிகளின் கூற்றுப்படி — கேட்டு ஒருவாறு ஊகத்துக்கு இடமளிக்கிறுர்கள்.

அந்தக் கதைகளின்படி — நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னே மாரரங்கா என்று ஒரு தேசம் இருந்தது. அதன் மன்னருக்கு இரண்டு புதல்வர்கள் கோ, ஹோடுமாடா என்பது அவர்கள் பெயர். மன்னர் இறந்ததும் கோ, மாரரங்காவின் சிங்காதனமேறினுன். ஹோடுமாடா அந்நாட்டிலிருந்து பலவந்தமாக விரட்டப்பட்டான். தனக்கென ஒரு தனி ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொள்ள, தன் மனைவி மக்கள், ஊழியர்கள், நண்பர்கள், உணவுப் பொருள், ஆயுதங்கள் ஆகியவற்றைப் பல கப்பல்களில் நிரப்பிக் கொண்டு கிளம்பினுன் ஹோடுமாடா. இப்படிக் கிளம்பிய அந்த இளவரசன் இந்தச் செழிப்பான தீவுக்கு வந்து நங்கூரமிட்டிருக்கிறுன். இந்தத் தீவுக்கு ராபாநீ என்று பெயரிட்டான். இந்தத் தீவில் குடியேறிய அவர்கள் பல்கிப் பெருகினுர்கள். ஹோடுமாடா மக்களின் தலைவனுகிச் சிவப்பு அங்கியும் தலையணியும் அணிந்து மன்னனுக விளங்கினுன்.

இவனுடன் வந்தவர்களில் பலர் உயர்குடிப் பிறந்தவர்கள். கௌரவமானவர்கள். அதைக் குறிக்க இவர்களது காதுகள் தொள்ளையுண்டு நீண்டு தொங்கின. தொழிலாளர்கள், உழைப்பாளிகள், பணியாளர்களின் காதுகள் சாதாரணமாக இருந்தன. மன்னன் ஹோடுமாடாவின் ஆட்சியில் எல்லாரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். அவன் இறந்ததும் தொள்ளைக் காதர்கள் மக்களைக் கொடுமைப்படுத்தலானுர்கள். அடிமைகளைப் போல் நடத்தலானுர்கள்.

மக்கள் கொதித்தெழுந்து தொள்ளைக் காதர்களை யெல்லாம் கொன்றுவிட்டார்கள். ஆனுல் மன்னர் ஹோடுமாடாவின் அன்பையும் பண்பையும் மட்டும் அவர்கள் மறக்கவில்லை. அவர்களில் ராபூ என்றெரு சிற்பி ஹோடுமாடாவுக்குச் சிலைகள் எழுப்பலானுன். ஒரு சிலை வடித்தானதும் அதைக் கண்ட மக்கள் மகிழ்ந்து போனுர்கள். இன்னும் நிறைய அதே போன்று சிலைகள் வடிக்குமாறு ராபூவைக் கேட்டுக் கொண்டார்கள். வெளியிலிருந்து தொள்ளைக் காதர்கள் பழிவாங்க இங்கு வராதிருக்க, ஹோடுமாடாவின் தொள்ளைக் காது சிலைகளைத் தீவு முழுவதும் நிறுவினுல் அதுவே அத்தீவை விரோதிகளிடமிருந்து காக்கும் என்று நம்பினுர்கள்.''

இந்தக் கதை உண்மையானுல் ராபூ என்ற அந்தச் சிற்பி முந்நூறு ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டுமே! நிறுவப்பட்டுள்ள இருநூற்று முப்பது சிலைகளைத் தவிர ஏராளமான சிலைகள் நிறுவப்பட வேண்டிய நிலையில் குவிக்கப்பட்டிருக்கின்றன. நிறுவப்பட்டவைகளைவிட இவை உருவத்தில் பெரியவை. ஆனுல் தோற்றத்தில் அதேபோன்றவை, இத்தனை சிலைகளும் ஒரே காலகட்டத்தில்தாம் செய்யப்பட் டிருக்கின்றன. ஏதோ காரணத்தினுல் திடீரென்று இத்திட்டம் கைவிடப் பட்டிருக்கிறது. அதை உருவாக்குவதற்கான கருவிகள் அப்படி அப்படியே போட்டவை போட்டபடி கிடக்கின்றன.

இத்தனை சிலைகளும் ஒரு தனி மனிதனின் சாதனையாக இருக்க முடியாது. ஏராளமான சிற்பிகளும் பல்லாயிரக் கணக்கான ஊழியர்களும் சேர்ந்து உருவாக்கியவைகளாகத்தாம் இருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.


இடுகாட்டுப் பகுதியில் காணப்படும் எலும்புகளைப் பார்த்தால் இன்னும் வியப்பு ஏற்படுகிறது. அந்தத் தீவில் தங்கக் கூடிய அளவுக்கு மேலான மனிதர்களின் எலும்புகள். பல நூற்றுண்டுகளாக அந்த இடம் புதைகுழியாகப் பயன்பட்டு வருகிறது என்பதைக் கணக்கில் கொண்டாலும்கூட நம்பமுடியாத அளவுக்கான எலும்புகள். அது ஏன்?

இதிலிருந்து ஈஸ்டர் தீவுக்கு அருகே ஒரு காலத்தில் வேறு பெரிய தீவோ, தீவுகளோ இருந்திருக்க வேண்டும். அந்தத் தீவுவாசிகளின் புனித இடமாக— இடுகாட்டுப் பகுதியாக இந்தத் தீவு இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் நினைக்கிறுர்கள்.

இப்படி ஆராய்ச்சியாளர்கள் இத்தீவுக்கு வருகை தந்து மொய்ப்பதைப் பொறுக்காத ஆதிவாசிகள் இச்சிலைகளில் பலவற்றைப் பெயர்த்து எறிந்துவிட்டார்கள். கடற் கொள்ளைக்காரர்கள் மற்றும் நாடோடிகள் இவைகளைச் சேதப்படுத்தியும், குல்லாய்களைத் தட்டிவிட்டும் நாசப்படுத்தி விட்டார்கள்.

இங்குள்ள அறுபத்தேழு கல்வெட்டுப் பலகைகள் பேசுமானுல்....?

ஆனுல் அதுவும்கூடச் சாத்தியமற்றதாகிவிடுகிறது. ஈஸ்டர் தீவு ஆதிவாசிகள் இக்கல்வெட்டுப் பலகைகளையெல்லாம் எங்கோ ஒளித்துப் புதைத்து வைத்துவிட்டார்கள். பல வருடங்களாக அவைகளைத் தேடியும் கிடைக்கவில்லை.



'' ஏண்டா பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்துட்டே ? நான்தான் நீ போவதற்கு ஐம்பது பைசா கொடுத்தேனே !
''போவதற்குத்தானே கொடுத்தே. அங்கேயே இருக்கிறதுக்குக் கொடுக்கலியே !''
சிரிக்க ச் சிரிக்க..! 'சாமா'
'' இந்த விஷமக் குரங்கு படுத்தற பாடு சகிக்கல்லே, இவனை மிருகக் காட்சிச்சாலைக்கு அழைத்துப் போய் வாருங்கள் !''
'' நான் அழைத்துப் போக முடியாது. அவர்களுக்குத் தேவையாக இருந்தால் வந்து அழைத்துப் போகட்டும்'!'
மாப்பிள்ளை: என் ஷேவிங் பிரஷ் எங்கே போச்சு ?
பையன் : என்னுடைய குதிரை யோட வால் எங்கே போச்சன்னு சொன்னு பிரஷ் எங்கே போச்சன்னு நான் சொல்றேன்.
'' இந்தக் கண்ணாடியில் தெரிவது நான்தான் !''
''அப்படியா? நான்தானே என்று நினைச்சேன் !''
'' ஐந்து வயதுக் குழந்தை சங்கீதக் கச்சேரி செய்யறதாமே, என்ன அதிசயம் ?''
'' அதிசயத்துக்கு என்ன இருக்கு ? இந்த விலைவாசி ஏற்றத்திலே சின்னக் குழந்தையிலிருந்து எல்லோரும் சம்பாதித்தால்தான் கட்டுப்படியாகும்.''

உள்ளே வந்த பாலபட்டர் திகைத்துப் போனார். காரணம், அவர் தெய்வமாகப் போற்றி வந்த எழுத்தாணியால், சீவப்பட்ட பனங்காயைக் குத்தி உரித்துக் கொண்டிருந்தான் ராய்நந்தா.

ராய்நந்தா கலஞ்சர் கோட்டையின் மன்னன். பாலபட்டர் அவனது அவைப் புலவர். அதோடு அவர் நண்பரும்கூட. பரிவாரங்கள் ஒன்றுமில்லாது மன்னன் தனியாக வேட்டையாடப் புறப்பட்ட போது, இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்க விரும்பிய பாலபட்டரும் அவருடன் வந்திருந்தார். வந்த இடத்தில் தான் புலவர் தெய்வமாகப் போற்றிய எழுத்தாணியை மன்னன் பனங்காயைச் சீவப் பயன்படுத்திவிட்டான்.

ராய்நந்தாவும் வேண்டுமென்றே அந்தச் செயலைச் செய்யவில்லை. வேட்டையாடிவிட்டுக் களைத்துத் திரும்பிய அவன், தாகத்தின் கொடுமை தாங்காது தவித்தான். பனங்காயை உரிக்க அவனிடம் அப்பொழுது கத்தி இல்லை. வேட்டையாடி இரத்தக் கறை படிந்திருந்த அதைக் கழுவிக் கொண்டு வரப் பணியாள் சென்றிருந்தான். அவன் திரும்பி வரும்வரையில் பொறுத்திருக்க இயலாத ராய்நந்தா, பாலபட்டரின் எழுத்தாணியைப் பயன்படுத்திக் கொண்டுவிட்டான். புலவரையே அவமதிக்கிறோம் என்ற எண்ணம் தோன்றினாலும், பாலபட்டர் திரும்பி வருவதற்குள் எழுத்தாணியைத் திருப்பி வைத்து விடலாம் என்ற எண்ணத்தில்தான் ராய்நந்தா துணிந்து அந்தத் தவற்றைச் செய்தான். ஆனால் அவன் எதிர்பாராதது நடந்து விட்டது. அவன் பாதி உரித்துக் கொண்டிருக்கும் போதே புலவர் வந்து விட்டார்!

தமது உயிர் நண்பனும், மன்னனுமான ராய்நந்தா இப்படித் தம்மையே அவமானப்படுத்தும் ஒரு செயலைச் செய்வான் என்பதைக் கனவில்கூட எண்ணாத பாலபட்டர் திகைத்துப் போனார். அதைத் தமது புலமைக்கு இழைக்கப்பட்ட அவமானமாக எடுத்துக் கொண்ட புலவர் ஆத்திரத்தால் கொதித்து எழுந்தார். ''மன்னவா! நீங்கள் செய்திருப்பது மிகப் பெரிய தவறு. இதற்கு நீங்கள் மன்னிப்புக் கேட்கத்தான் வேண்டும்'' என்று கூறினார்.

வேறொரு சமயமாக இருந்தால், ''மன்னித்துக் கொள், நண்பா!'' என்று மன்னன் தன்னுடைய செயலுக்கு மன்னிப்புக் கேட்டிருப்பான். அந்த அளவுக்கு இருவரும் உயிர் நண்பர்கள். ஆனால் தனது செயலுக்கு வருந்திப் பணிந்து போகும் நிலையில் மன்னன் அப்பொழுது இல்லை. அதற்கு மாறாக, செய்துவிட்ட தவற்றைப் புலவர் கண்டு பிடித்துவிட்டாரே என்ற ஆத்திரம் தான் அவனுக்கு ஏற்பட்டது. எதிரே இருப்பது தனது உயிர் நண்பர் என்பதையும், அவர் மகாகவி என்பதையும் மன்னன் மறந்தான்.

''மன்னனை அண்டிப் பிழைக்கும் ஒரு புலவனுக்கு இத்தனை அகம்பாவமா?'' என்று கேட்டான்.

ஒரு மகாகவியால் இதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? ''மன்னவா! இந்த எழுத்தாணியைக் கொண்டுதான் என் முன்னோர்கள் எத்தனையோ மகா காவியங்களை உருவாக்கினார்கள். இதை இப்படி அவமதித்ததோடு, புலவர்களையும் இழிவாகப் பேசிவிட்டீர்கள். வயிற்றுப் பசிக்காகப் புலவர்கள் அரசர்களை அண்டி வாழ்வதும், புகழ்ப் பசிக்காக மன்னர்கள் புலவர்களை அண்டி வாழ்வதும் தவிர்க்க முடியாதது என்பதை உணராது இழிவாகப் பேசிய உங்களிடம் இனி எனக்கு வேலையில்லை.



அரசனின் வாளுக்குப் புலவனின் எழுத்தாணி எந்தவிதத்திலும் குறைந்ததல்ல. இதை அறிந்திருந்தும், எழுத்தாணியை அவமதித்துவிட்ட குற்றத்துக்குரிய தண்டனையை உங்களுடைய கரம் பெற்றே தீர வேண்டும்'' என்று சினத்துடன் கூறிய பாலபட்டர் வேகமாகப் போய்விட்டார்.

நாட்கள் ஓடின. ஆப்கானிஸ்தானத்திலிருந்து பெரும்படையோடு வந்த முகம்மது கஜினி எதிர்ப்பட்ட இந்து மன்னர்களையெல்லாம் வென்று கலிஞ்சர் கோட்டையை நோக்கி முன்னேறினான். கலிஞ்சர் மன்னன் ராய் நந்தாவுக்குச் சொந்தமான குவாலியர் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்ட கஜினியின் கடல் போன்ற படை கலிஞ்சர் கோட்டையையும் வளைத்து முற்றுகையிட்டது. முற்றுகை மாதக் கணக்கில் நீடித்தது. கோட்டைக்குள் இருக்கும் மக்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களையும், படைக் கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு செல்லும் இரகசிய வழிகளையெல்லாம் பகைவரின் படைகள் கண்டுபிடித்து அடைத்துவிட்டன. வேறு வழியின்றி ராய்நந்தா கஜினி முகம்மதுக்குப் பணிய இசைந்து வேண்டுகோள் அனுப்பினான்.

ராய்நந்தாவின் வேண்டுகோளை ஏற்று முற்றுகையை விலக்கிக் கொள்ளச் சம்மதித்த கஜினி அதற்கு ஈடாக லட்சக் கணக்கான பொற்காசுகளையும், நூற்றுக் கணக்கான யானைகளையும் கேட்டதோடு, அவன் தனக்கு அடிமை என்பதை உலகறியச் செய்யத் தனது வலது கரத்திலிருந்து ஒரு விரல் நுனியை வெட்டிக் காணிக்கையாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தான்.

நிபந்தனைக்கு இணங்குவதைத் தவிர ராய்நந்தனுக்கு வேறு வழி ஏதும் தோன்றவில்லை. முற்றுகை மாதக் கணக்கில் நீடித்திருந்ததால் ஏற்கனவே மக்கள் போதிய உணவும் குடிநீரும் இன்றி அரைப் பட்டினியாக உற்சாகமின்றிக் கிடந்தார்கள். இதே நிலை நீடித்துக் கொண்டிருந்தால் வெற்றி பகைவனுக்குத்தான். கஜினி, தன்னுடைய நிபந்தனைகளுக்கு இணங்காது தோற்ற மக்களை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தினான் என்பதையெல்லாம் கதை கதையாகக் கேட்டிருந்த ராய்நந்தா, மக்களின் நன்மைக்காகத் தனது விரலைத் தியாகம் செய்யத் தயாரானான். அந்த நிலையில் ராய்நந்தாவினால் பாலபட்டரைப் பற்றி நினைக்காதிருக்க முடியவில்லை. மகாகவியான அவருடைய சாபம்தான் இப்படித் தன்னை வதைக்கிறதோ ?

ராய்நந்தா பாலபட்டரைத் தேடிச் சென்று மன்னிப்புக் கேட்டான். கோபம் தணிந்து மன்னனை மார்போடு அணைத்துக் கொண்ட புலவர் கஜினி

வாளும் எழுத்தாணியும்

ரேவதி



யின் கலை ஞானத்தையும், கல்விச் சிறப்பையும், புலமையையும், மத இன மொழி வேறுபாடில்லாது புலவர்களையும் அறிஞர்களையும் ஆதரித்துப் போற்றும் பெருமைகளைப் பற்றியும் அழகான கவிதை ஒன்று புனைந்தார். அதை ராய்நந்தாவிடம் கொடுத்து, ''விரல் காணிக்கையை இப்பொழுது அனுப்ப வேண்டாம். இந்தக் கவிதையை நீங்களே எழுதியதாகக் கூறி, மற்ற காணிக்கைப் பொருள்களோடு இதையும் கஜினிக்கு அனுப்பி வைத்துப் பாருங்கள்'' என்று யோசனை கூறினார்.

காணிக்கைப் பொருள்களோடு ராய்நந்தாவின் விரலும் வராதது கண்டு வெகுண்ட கஜினி, அதில் வைக்கப்பட்டிருந்த கவிதையை எடுத்துப் படித்தான். மிகச் சிறந்த கலா ரசிகனும், கவிஞனும் கலைஞனுமான அவன் கவிதையின் நடையிலும், கருத்திலும் மனத்தைப் பறி கொடுத்தான். இவ்வளவு அற்புதமாகக் கவிதை புடைக்கும் ராய்நந்தாவின் விரலைக் காணிக்கையாகக் கொள்வது மிகப் பெரிய பாவம் என்ற முடிவுக்கு வந்தான் கஜினி. ஆகவே அவன் தனது முடிவை எழுதி, ராய்நந்தாவின் கவிதைக்குப் பரிசாகத் தான் கொள்ளையடித்து வைத்திருந்த ஏராளமான தங்கக் குவியலில் ஒரு பகுதியையும், தான் கைப்பற்றியிருந்த கோட்டைகளில் பதினைந்தையும் அளித்து விட்டுத் தன் படைகளோடு திரும்பிச் சென்றான்!

வாளால் முடியாததை எழுத்தாணி வென்று காட்டியது! ராய்நந்தாவின் கவிதையைத் தன்னோடு கஜினிக்கு எடுத்துச் சென்ற முகம்மது கஜினி தன்னுடைய கவிதைகளான ''ஃபிகஹ்'' ஹோடு அதைப் பல காலம் வரையில் பாதுகாத்து வந்தான்.

செய்து பாருங்கள்

யந்திரமில்லாமல் அச்சு!

பத்திரிகைகளில் காணும் அழகழகான படங்களைப் பார்த்ததும் 'இது போன்ற படங்களை நாம் அச்சடித்து அழகு பார்க்க முடியுமானால்.....?' என்று உங்களுக்கு ஒரு நினைப்பு.

''முடியுமே!'' என்று ஒரு குரல் கேட்கிறது — அது கோகுலத்தின் குரல்தான்!

''எப்படி முடியும்? பெரிய பெரிய அச்சு யந்திரங்கள், பிளாக்குகள், வண்ண மை — இன்னும் என்னென்னவோ வேண்டுமாமே அச்சடிக்க.''

கோகுலக் குரல் கூறுகிறது, ''கவலைப்படாதீர்கள். பத்திரிகைகளில் உங்களுக்குப் பிடித்தமான படத்தை அதே மாதிரி, அதே வண்ணங்களில் அப்படியே பிரதி எடுத்துக் கொள்ள ஒரு சுலபமான முறையைச் சொல்லித் தருகிறேன், போதுமா? இதற்கு வேண்டியதெல்லாம் ஒரு சின்னக் கண்ணாடிப் புட்டி, தண்ணீர், டர்பைண்டைன், சோப்புத் துண்டு, வெள்ளைக் காகிதம், படங்கள் நிறைந்த பத்திரிகை, ஒரு ஸ்பூன். இனி நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:

கண்ணாடிப் புட்டியில் நீரை நிரப்பிக் கொள்ளுங்கள். அத்துடன் இரண்டு டேபிள் ஸ்பூன் டர்பைண்டைனைச் சேர்த்துக் கலக்குங்கள். இக்கலவையில் (ஓர் அழிக்கும் ரப்பர்த் துண்டு அளவுள்ள) சோப்புக் கட்டியைப் போட்டு கரையச் செய்யுங்கள். மந்திர மை தயாராகிவிட்டது! இதை உபயோகிக்கும்போதெல்லாம் பாட்டிலைக் குலுக்கிவிட்டுப் பயன்படுத்த வேண்டும். பிரதி எடுக்கும் படத்தின் மீது இந்தக் கலவையைத் இலேசாகத் தடவி ஈரப்படுத்துங்கள். படம் உள்ள காகிதத்தை உறுதியான தளத்தின்மீது வையுங்கள். அதன் மீது காப்பி எடுக்க வேண்டிய வெள்ளைக் காகிதத்தைக் கொண்டு மூடுங்கள். ஸ்பூனின் அடிப் பக்கத்தினால் வெள்ளைக் காகிதத்தின்மீது அழுத்தி வேகமாகத் தேயுங்கள். மந்திர மை தடவியுள்ள பகுதி முழுவதும் ஸ்பூனினால் பலமுறை தேய்த்தானதும் வெள்ளைக் காகிதத்தை மெள்ளத் தூக்கிப் பாருங்கள். நீங்கள் பிரதி எடுக்க விரும்பிய படம் அதன் வண்ணங்களோடு அப்படியே வெள்ளைக் காகிதத்தில் அச்சாகி இருக்கும். போட்டோப் படங்களைக்கூட இம்முறையில் பிரதி எடுக்கலாம். ஆனால் ஒன்று. பிரதி எடுத்த படம் மூலப் படத்துக்கு இடம் வலமாக இருக்கும்



அடிமுட்டாளும் - அதிபுத்திசாலியும்

ஒரு சிறுத்தைப் புலி கிராமத்துக்கு அருகே உள்ள காட்டில் ஒரு வேடனல் வைக்கப் பட்டிருந்த பொறிக்குள் விழுந்து விட்டது. அதனல் அதிலிருந்து விடுபட முடியவில்லே. தான் அமைத்த பொறிக்குள் சிறுத்தை சிக்கியதைக் கண்ட வேடனுக்கு மகிழ்ச்சியா யிருந்தது. பொறியைச் சுற்றிச் சுற்றி வந்து ஆனந்த நடனமாடினன். ''ஹா, ஹா! சிறுத்தையே! என் வலேக்குள் விழுந்தாயா, சின்னப் புத்தி சிறுத்தையே! நீ எத்தனே முட்டாளாக இருந்தால் இவ்வளவு இலகுவாக வந்து மாட்டிக் கொண்டிருப்பாய்!'' என்று கொக்கரித்தான் வேடன்.

சிறுத்தை பதில் சொல்லிற்று: ''என் முட்டாள்தனம்தான் என்னே இங்கே சிறையாக்கி யிருக்கிறது. உன் புத்தி சாலித்தனம் உன்னே இங்கே கொண்டு வந்திருக்கிறது போலும்!''

வேடனுக்கு வியப்பான வியப்பு. சிறுத்தை பேசுகிறதே! ''இதுவரையில் பேசும் சிறுத்தையை யாரும் பிடித்ததே இல்லே. நான்தான் அந்தச் சாதனே யைச் செய்துள்ளேன்'' என்று குதூகலப்பட்டுக் கொண்டே கிராமத்துக்கு ஓடினன்.

''நான் பேசும் சிறுத்தையைப் பிடித்திருக்கிறேன்'' என்று கூவினன். எல்லோரும் அவனேச் சூழ்ந்து கொண்டார்கள். தன்னுடன் சிறுத்தை பேசிய விந்தையைக் கூறினன். ஆனல் யாரும் அவனே நம்பவில்லே. ''பொய். சிறுத்தையாவது பேசுவதாவது?'' என்ருர்கள் ஊரார்.

''உண்மைதான். மற்ற சிறுத்தைகள் பேசாதிருக்கலாம். இது பேசுகிறது.''

''சிறுத்தைகள் மனித பாஷை பேசுவதாவது. முழுப் பொய்.''

''நான் சொல்வது பொய்யானல், நான் இனிமேல் காட்டிலேயே வசிக்கிறேன். கிராமத்துப் பக்கமே வர மாட்டேன்? போதுமா'' என்று சவால் விட்டான் வேடன்.

''நீ உன் வார்த்தையை மீறக் கூடாது. நினேவிருக்கட்டும். உன்னல் நிரூபிக்க முடியாவிட்டால் நீ காட்டு வாசியாகி விட வேண்டும்'' என்று உறுதி செய்து கொண்டு எல்லோரும் அவனுடன் காட்டுக்குப் போனர்கள். பொறிக்குள் விழுந்திருக்கும் சிறுத்தையிடம் அழைத்துப் போனன் வேடன்.

''சின்ன புத்தி சிறுத்தையே! உன் முட்டாள்தனத்தால் வந்து மாட்டிக் கொண்டாயில்லேயா?'' என்று கேட்டான். சிறுத்தை பதிலே சொல்லவில்லே. ''ஏ, புள்ளி போட்டுக் கொண்ட மிருகமே! நீ இங்கு வந்து சிக்கிக் கொண்டது உன் முட்டாள்தனம் தானே?'' — கத்தினன். சிறுத்தை மௌனமாக முடங்கிக் கிடந்தது. ஒரு குச்சியை எடுத்து அதைக் குத்தி மறுபடியும் அதே போல் கத்திக் கூக்குரலிட்டான். ம்ஹூம்! சிறுத்தை வாயே திறக்கவில்லே. கூட வந்தவர்கள் சிரித்தார்கள். ''போய்யா, சிறுத்தை எங்காவது பேசுமா? நீதான் முட்டாள். உன் சபதப்படி இனி நீ வாழ வேண்டிய இடம் இதுதான். புரிந்ததா? இனி கிராமத்துக்கு வராதே. இங்கேயே உன் குடிசையை அமைத்துக் கொள்'' என்று கூறிப் போய்விட்டனர்.

வேடனுக்கு வேதனேயான வேதனே. ஆத்திரத்துடன் சாது போலப் படுத்திருக்கும் சிறுத்தையைப் பார்த்து, ''ஏ முட்டாள் மிருகமே! ஏன் நீ பேசவில்லே? முதலில் என்னிடம் மட்டும் பேசினயே. நான் சாட்சிகளே அழைத்து வந்த போது ஏன் உன் வாய் அடைத்துப் போயிற்று?'' என்று கத்தினன்.

சிறுத்தை நிதானமாகப் பதில் சொல்லிற்று. ''என்னுடைய முட்டாள்தனம் என்னே இங்கே சிறைப்படுத்தியிருக்கிறது. உன்னுடைய புத்திசாலித்தனம் உன்னேக் காவலாளியாக்கி யிருக்கிறது. நம்மில் ஒருவர் ரொம்ப புத்திசாலி; மற்றவர் அடிமுட்டாள். இப்படியே நாம் இருவரும் நம் வாழ்நாளே இங்கு முடித்துக் கொள்வோம்.''

அதி புத்திசாலியும் அதி முட்டாளும் சகோதரர்கள் என்று ஒரு பழமொழி வழங்குகிறது ஆப்பிரிக்காவில். அது இதனல்தானே?

— சிகேயெம்





நான்கு கேள்விகள்

முன்பொரு சமயம் மணிபுரி நாட்டை மணிவல்லபன் என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த புத்திசாலி. எனினும் அந்த அரசன் எவ்வளவுக்கெவ்வளவு புத்திசாலியாக இருந்தானோ, அவ்வளவுக்கவ்வளவு கர்வம் உடையவனாகவும் இருந்தான். தனக்கு நிகரான அறிவாளி உலகிலேயே கிடையாது என்பது அவன் எண்ணம்.

ஒரு நாள் அவனது அரசவைக்கு ஒரு கவிஞர் வந்தார். அவர் பல நாடுகளுக்கும் சென்று வந்தவர். எனவே அரசன் அவர் சென்று வந்த நாடுகளைப் பற்றியும், அந்த நாடுகளில் அவர் கண்ட விசேஷங்களைப் பற்றியும் விசாரித்தான். கவிஞர், ''அரசே! நான் பல நாடுகளையும் சுற்றி வந்துள்ளேன், பல வகையான மக்களையும் கண்டிருக்கிறேன். நான் கண்ட நாடுகளிலேயே



பார்வதிபுரிதான் என்னை மிகவும் கவர்ந்
தது. ஏனெனில், பார்வதபுரி மக்கள்
அனைவருமே மிக்க அறிவாளிகள்''
என்றார். கவிஞரின் புகழுரையில் அரச
னுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

''ஒரு வேளை பார்வதபுரியின் அரசர்
உமக்கு ஏராளமாக வெகுமதிகள் அளித்
திருப்பார். அதனால்தான் நீர் இவ்வாறு
கூறுகிறீர் என நினைக்கிறேன்'' என்றான்
அரசன். அரசவையில் இருந்தவர்களும்
அரசனுடன் ஒத்துப் பாடினார்கள்.

இவ்வாறு அரசன் கூறியதைக் கேட்ட
கவிஞர், ''அரசே! என் வார்த்தைகளில்
தங்களுக்குச் சிறிதும் நம்பிக்கை ஏற்
படாதது குறித்து நான் பெரிதும் வருந்து
கிறேன். எனினும் தாங்களே ஒரு முறை
பார்வதபுரிக்குச் சென்று சோதித்தறிந்
தால், நான் கூறியவை நூற்றுக்கு நூறு
உண்மை என்பது புலப்படும்'' என்றார்.

அரசனும் அவ்வாறே நேரில் சென்று
சோதித்தறிய விரும்பினான். மறுநாளே
மாறுவேடம் அணிந்து தன் மந்திரி
யுடன் பார்வதபுரிக்குப் பயணமானான்.

பார்வதபுரிக்கு அருகில் வந்தபோது
ஓர் இடையன் ஆடுகளை மேய்த்துக்
கொண்டிருப்பதைக் கண்ட அரசன்
''அந்தக் கவிஞர் இங்குள்ள மக்கள்
அனைவருமே அறிவாளிகள் என்றல்லவா
சொன்னார்! இந்த இடையனையே சி
கேள்விகள் கேட்டுக் கவிஞர் கூற்று எ
வளவு தூரம் உண்மையானது என அ
வோம்'' என எண்ணினான்.

பிறகு அரசன் அந்த இடையனை
நெருங்கி, ''ஐயா, ஒளியில் சிறந்த
எது?'' என்று வினவினான்.


மூளைக்கு வேலை விடைகள்

நிறை என்ன?

■ கப்பலில் இருந்த தானியத்தின் அளவு 6000 டன்கள். ஒரு படகு மூன்று தடவைகள் ஏற்றிச் செல்லும் தானிய அளவுக்கும் ஒரே தடவையில் செல்லக் கூடிய அளவுக்கும் வித்தியாசம் 160 டன்கள். அப்படியானால் இரண்டு நடை சுமந்து செல்லக்கூடிய தானியத்தின் அளவு 160 டன்கள். ஆகவே இப்போது ஒரு படகினால் ஒரு தடவைக்கு எண்பது டன்கள் ஏற்றிச் செல்ல முடியும். மொத்தம் இருபத்தைந்து படகுகள். ஒவ்வொன்றும் மூன்று முறை போய் வந்திருக்கின்றன. ஆகவே, 80 × 75 = 6000 டன்கள்.

வழிகாட்டி

■ கைகாட்டி மரத்தில் இவ
கிளம்பி வந்த வாழையூர்ப் பாதைை
குறிக்கும் பெயர்ப் பலகையும் இருக்
கில்லையா? ஆகவே கைகாட்டி மரத்தை
அதிலுள்ள வாழையூரை நோக்கி இரு
கும் பலகையை தான் வந்த பா
யைக் காட்டும்படி தூக்கி நிறுத்தின
அப்போது காட்டுப்பட்டியின் பெய
பலகை அந்த ஊர்ப் பாதையைக் கா
டியபடி அமைந்தது.



அதற்கு அந்த இடையன் சற்றும் தயக்கமின்றி, ''ஒளியில் சிறந்தது சூரிய ஒளிதான்'' என விடையளித்தான்.

''நீரில் சிறந்தது எது?'' என்று அரசன் வினவ, ''கங்கை நீர்தான்'' என இடையனின் பதில் வந்தது. அரசனுக்கு வியப்பு மேலிட்டது. எனினும் அரசன் இடையனைத் தொடர்ந்து வினவினான்.

'' யாருடைய உறக்கம் சிறந்தது ?''

''களைப்படைந்த மனிதனின் உறக்கமே சிறந்தது.''

''மலர்களில் உயர்ந்தது எது?''

''தாமரை மலர்தான்'' என்று விடையிறுத்தான். இடையனின் விடைகளைக் கேட்டு மன்னன் பாராட்டினான்.

அரசன் தன்னைப் புகழ்வதைக் கண்ட இடையன் கடகடவெனப் பெரிதாகச் சிரிக்கத் தொடங்கினான்.

இடையன் நகைப்பதைக் கண்ட மந்திரி, ''ஐயா, தாங்கள் ஏன் நகைக்கிறீர்கள்?'' எனக் கேட்டான். அதற்கு அந்த இடையன், '' நான் கூறிய தவறான விடைகளைச் சரியான பதில்கள் என நினைத்து என்னை இவ்வளவு புகழ்கிறீர்களே, அதைக் குறித்துத்தான் நான் நகைக்கிறேன்'' என்றான். மன்னனுக்கும் மந்திரிக்கும் ஏற்பட்ட திகைப்பு நீங்கச் சில விநாடிகள் ஆயின. பின்னர் மந்திரி, ''அப்படியானால் சரியான விடை என்னவோ?'! என்று கேட்டார்.

இடையன் கூறலானான். ''ஒளியில் சிறந்தது கண்களின் ஒளியே அன்றி வேறில்லை. நீரில் உயர்வானது வறண்ட பிரதேசத்தில் கிடைக்கும் நீர்தான். நல்ல ஆரோக்கியமான மனிதனின் உறக்கமே மிகவும் சுகமானது, உயர்வானது. அதே போல், மலர்களில் உயர்ந்தது பருத்திப்பூதான். ஏனெனில் அது வாடி உதிரும்போதும் நமக்கு, விலை மதிக்க முடியாத, மானத்தைக் காக்கும், பஞ்சு கிடைக்கிறது.''

இடையனின் இந்தப் பதில்களைக் கேட்ட அரசன் தன் முட்டாள்தனத்தைக் குறித்து வெட்கினான். ''கவிஞர் பெருமான் மிகச் சரியாகவே சொன்னார். ஓர் இடையனே இவ்வளவு கூரிய அறிவு படைத்தவனாக இருக்கிறான் என்றால் இந்நாட்டில் மற்றவர்கள் எவ்வளவு அறிவாளிகளாக இருப்பார்கள்!'' என எண்ணிய அரசன் நகருக்குள் நுழையாமலேயே மணிபுரத்துக்குத் திரும்பினான். கவிஞருக்குப் பொன்னும் பொருளும் மற்றும் ஏராளமான வெகுமதிகளும் அளித்துச் சிறப்பித்தான். அன்றோடு அரசனின் கர்வம் அடியோடு அகன்றது.

ஜி. இராமநாதன்



சீதா – கீதா

■ மணிக்கு நாலு மைலானால் பதினைந்து நிமிஷத்துக்கு ஒரு மைல். மணிக்கு ஐந்து மைலானால் பன்னிரண்டு நிமிடத்துக்கு ஒரு மைல். வேகமாகப் போகும்போது ஒவ்வொரு மைலுக்கும் மூன்று நிமிஷங்கள் குறைவாக எடுத்துக்கொள்கிறாள். ஆனால் அவள் கடக்க வேண்டிய மொத்த தூரத்தையும் பதினைந்து நிமிஷங்கள் குறைவாக (நான்கு மைல் வேகத்தில் போனால் ஐந்து நிமிஷத் தாமதம். ஐந்து மைல் வேகத்தில் போனால் பத்து நிமிஷம் முன்னால் ஆக $10 + 5 = 15$) கடக்கிறாள். ஆக பதினைந்து நிமிஷங்களில் எத்தனை மூன்று நிமிஷங்கள் இருக்கின்றன ? 5–கீதா நடந்த தூரம் ஐந்து மைல்கள்.

■ **வாத்துக்கள் மூன்று**



விண்வெளியும் ஆழ்கடலும்

முதன் முதலில் விண்வெளியில் பயணம் செய்தது யார் தெரியுமா!

'ஓ, தெரியுமே!' என்று ககாரின் என்ற ரஷ்ய விண்வெளி வீரரின் பெயரைச் சொல்லுவீர்கள். அதையடுத்து அமெரிக்க விண்வெளி வீரர்களின் பெயர்களை யெல்லாம் ஒப்பிப்பீர்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம் முன்னால் ஒருவர் விண்வெளியின் எல்லை வரையில் போய் வந்திருக்கிறார். அவர் பெயர் **அகஸ்டி பீக்கார்டு**. அவர் ஒரு பேராசிரியர். ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி. ஆகாயத்திலே பறந்து மிதந்து செல்லும் யந்திரங்களிலேயே மிக மிக எளிமையான பலூனில்தான் இவர் இத்தகைய துணிகரமான செயலைச் செய்தார் என்றால் வியப்பாக இல்லையா? இவர் விண்வெளியின் விளிம்புக்குப் போய்த் திரும்பிய ஆண்டு 1931ம் வருஷத்தில்.

பூமியைச் சுற்றிக் காற்றும் மேகங்களும் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. நமக்கு வானிலை மாற்றங்களைக் கொடுப்பது இந்தக் காற்றும் மேகங்களும்தான். இதற்கு ட்ரோபோஸ்ஃபயர் (Troposphere) என்று பெயர். 1931ம் ஆண்டு வரையில் யாருக்கும் இந்த ட்ரோபோஸ்ஃபயர் பகுதியைத் தாண்டிப் போகத் துணிவு ஏற்பட்டதில்லை. இதற்கு மேலுள்ள வெளிக்கு ஸ்ட்ராடாஸ்ஃபயர் (Stratosphere) என்று பெயர். மனித உயிருக்கு அபாயம் விளைவிக்கும் பல ஆபத்துக்கள் நிறைந்த பகுதி இந்த ஸ்ட்ராடாஸ்ஃபயர். ஆனால் பேராசிரியர் பிக்கார்டு இந்தப் பகுதிக்குப் போய்ப் பார்த்து விடுவதென்று முடிவு செய்து விட்டார்.

பலூன்களில் பல மணி நேரங்கள் ஆகாயத்தில் பறந்து பழக்கம் உண்டு இவருக்கு. பலூனில் பறப்பது என்பது ஸ்விஸ் நாட்டில் ஒரு பிரபலமான விளையாட்டு. பேராசிரியர் பிக்கார்டுக்குப் பலூனில் பறப்பது குதூகலமூட்டும் வெறும் விளையாட்டு மட்டுமல்ல. விண்வெளியில் ஸ்ட்ராடாஸ்ஃபயர் எல்லைக்குள் போய்ப் பார்த்துவிட வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டுத்தான் செயல் பட்டார். அந்தப் பகுதியில் காஸ்மிக் கதிர்கள் மிக்க வீரியமுடையவனவாக இருக்கும். அதை அங்கு போய் ஆராய வேண்டுமென்று விரும்பினார். காஸ்மிக் கதிர்களை வெறும் திறந்த கூடைக்குள் உட்கார்ந்தபடி ஆராய முடியாது. அது பத்திரமான முறையல்ல என்பதையும் பிக்கார்டு அறிவார். ஆகவே இதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கலானார்.

ஒரு நாள் அவருக்கு ஓர் அதிசயமான யோசனை உதித்தது. நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆழ்கடலின் அடியில் செல்லவில்லையா? அதே மாதிரி...அதே மாதிரி ...கூடைக்குப் பதில் காற்றுப் புகாத ஒரு காபினைத் தயாரித்துப் பலூனோடு இணைத்து விட்டால்? ஏறத் தாழ நீர்மூழ்கியைப் போலவே இது வானவெளி மூழ்கி. யோசனைக்குச் செயல் உருவம் கொடுக்கலானார். ஏழு அடி குறுக்களவில் அலுமினியத்திலான ஒரு கோளத்தை உருவாக்கினார். அவரும் அவர் உதவியாளரும் விஞ்ஞானச் சாதனங்களும் மட்டுமே அடங்கும் அளவுக்கு உருவாக்கப்பட்டிருந்தது அந்த அலுமினியத்தாலான கோளம். பலூன் நூறு அடி குறுக்களவு கொண்ட பெரிய அமைப்பு. உறுதியான பருத்தி நூலினால் நெய்து ரப்பரைக் கொண்டு உறுதியாக்கப்பட்டிருந்தது.

அமைதியான வானிலைதான் இம்மாதிரியான பலூன்களைப் பறக்க விடுவதற்குத் தேவை. ஆகவே பிக்கார்டு அதிகாலை வேளையையே தம் பலூனைக் கிளப்புவதற்கு ஏற்ற நேரமாகத் தேர்ந்தெடுத்தார். அப்போது பலமான காற்று இருக்காது. பிக்கார்டின் உதவியாளர் பலூனை ஜலவாயுவினால் நிரப்பிக் கிளப்புவதற்குத் தயாராக்கினார். திடீரென்று எதிர்பாராத விதமாகப் பெருங் காற்று வீசவே பலூன் தரையில் வெகு தூரம் இழுத்துச் செல்லப்பட்டுச் சேதமடைந்து விட்டது. பிக்கார்டு பலூனிலிருந்து ஜல வாயுவை வெளியேறச் செய்து அன்றைய முயற்சியைக் கைவிட்டு ஒத்திப் போட்டார்.

கூடியிருந்தவர்களெல்லாம் பேராசிரியரைப் பார்த்து நகைத்தார்கள். ''இந்தப் பைத்தியக்காரச் செயல் இப்படித்தான் தோல்வி யடையப் போகிறதென்று எங்களுக்கு முன்பே தெரியும்'' என்றார்கள். ஆனால் பிக்கார்டு மனம் தளரவில்லை. அடுத்த ஆண்டு மே மாதத்தில் தம் பயணத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். அவரும் அவருடைய உதவியாளரும் பூமியிலிருந்து ஒன்பது மைல்கள் உயரச் சென்று ஸ்ட்ராடாஸ்ஃபயர் பகுதிக்குப் போய்ப் பல முக்கியமான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வந்தார்கள். அதற்காக அவர் பயன்படுத்தியவை மிக மிக எளிமையான உபகரணங்கள்

தான். ஸ்ட்ராடாஸ்ஃபயர் பகுதியில் எவ்வித அபாயமும் கிடையாது என் பதை முதன் முதலில் விஞ்ஞானிகளுக்கு நிரூபித்துக் காட்டினர். எல்லாவற்றை யும் விட முக்கியமானது அந்தப் பகுதிக் குப் போய்விட்டு அதைப் பற்றி விவரிக் கப் பூமிக்குப் பத்திரமாகத் திரும்பி வந்தார்களே அதுதான்.

முதன் முதலில் விண்வெளியின் விளிம்புக்குப் போன அகஸ்டி பிக்கார்டு, 1884ம் ஆண்டு ஸ்விட்ஸர்லாந்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு வர். இவர் சகோதரர் பெயர் ஜீன். இவர்களின் தகப்பனுரும் ஒரு விஞ் ஞானிதான். பிக்கார்டுக்கும் ஜீனுக்கும் பத்து வயதானபோதே இருவரும் காகி தத்தினுல் பலூன்களைச் செய்து அதில் உஷ்ணமான காற்றை நிரப்பி அது மேலே எழும்பி மிதப்பதைக் கண்டு ஆனந்தப்பட்டவர்கள். பையன்கள் இருவரும் மலை ஏறுவதில் மகா சூரர்கள். மலைக்கு மேலே மேலே ஏறிப் போகும்போது காற்றில் படிப்படியாக ஏற்படும் மாற்றங்களைக் கண்டு வியந் திருக்கிறார்கள். மலை உச்சியை அடைந் ததும் அதற்கு மேலே உள்ள காற்று மண்டலத்துக்குள்ளும் போய்க் களிக்க வேண்டும். விண்வெளியை ஆராய்ந்து அங்குள்ள அதிசயங்களை அறிய வேண் டும் என்று அவர்கள் ஏங்கினார்கள். இரண்டு பேரும் வயதானதும் பேராசிரி யர்களானார்கள். பிக்கார்டு பெல்ஜியத்தி லும் ஜீன் அமெரிக்காவிலுமாக வாழ்ந்த போதிலும் இருவருமே பலூனில் பறப் பதில் ஒருமுகமான ஆவலுடையவர்க ளாகத்தான் இருந்தார்கள். ஜீனும் விண் வெளிக்குப் பறந்திருக்கிறார்.

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு தனி மனிதனின் விண்வெளிப் பயணம் நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றாகிவிடவே பிக்கார்டு தம் கவ னத்தை வேறு திசைகளில் திருப்பினர், அதுவும் இதுவரையில் யாரும் ஆரா யாத விஷயங்களில். விண்வெளியைப் பற்றிக் கனவு கண்டவர் நிசப்தமான ஆழ்கடலின் அடி மட்டத்துக்குப் போய்ப் பார்க்க வேண்டும் என்று விரும்பியதில் வியப்பில்லை. சில ஆராய்ச் சியாளர்கள் கடலுக்குள் மூழ்கிப் பார்த் திருக்கிறார்கள். இரும்பாலான கோளத் தினுள் அமர்ந்தபடி அதைக் கடலுக் குள் இறக்கி ஆராய்ந்தார்கள். இதற்கு பாதிஸ்ஃபயர் (Bathisphere) என்று பெயர். இந்த இரும்புக் கோளத்தில் சிறிய ஜன்னல் இருக்கும். இதன் மூலம் கடலின் அற்புதங்களை உள்ளிருந்தபடி காணலாம். இந்த பாதிஸ்ஃபயர், கடலின் மேல் பரப்பிலுள்ள கப்பலோடு கேபிள் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். இதனுல் அபாயங்கள் அதிகமுண்டு. கேபிள் கடற்பாறைகளில் சிக்கி அறுந்து போனுல் பாதிஸ்ஃபயரின் கதி அவ் வளவுதான். ஆழ்கடலின் அடியில் போய்ச் சமாதி ஆகிவிடும் அதில் உள்ளோருடன்.

பேராசிரியர் பிக்கார்டு இந்தக் குறை இல்லாதபடி ஒரு பாதிஸ்ஃபயரை உரு வாக்கினர். அதற்குக் கேபிள் தேவை யில்லை. இதைக் கோளத்தினுள்ளிருந்த படியே இயக்கலாம். இதுவரையில் யாரும் போகாத அளவு ஆழத்துக்கும் போகலாம். இதன் இரும்புச் சுவர் களின் கனம் நான்கு அங்குலங்கள். கடல் நீரின் நாலா பக்கத்து அழுத்தும் சக்தி இதை ஏதும் செய்ய முடியாது.

1953ல் தம் மகன் காக்விஸ்ுடன் இத்தாலியக் கடற்கரையில் கேப்ரி அருகில் இரண்டு மைல் ஆழம்வரை சென்றார். 1960ல் இன்னும் அதிசய மான ஆழ்கடல் பிரயாணத்தை நிகழ்த் தினர். அமெரிக்கக் கடற்படையின் உதவியுடன், கடலுக்குள் ஏழு மைல் ஆழம்வரை தம் பாதிஸ்ஃபயரில் பய ணம் செய்து திரும்பினர். கடலிலே இதுதான் மிக மிக ஆழமான தூரம். இதை பிக்கார்டு உலகின் அடித்தளம் (பேஸ்மெண்ட்) என்று அழைத்தார்.

விண்வெளிக்குப் போனவர் ஆழ் கடலின் அடியையும் கண்டதில் வியந்தை ஏதுமில்லையே?



தெரியுமா?

728. கில்பர்ட் தீவுகளும், எல்லிஸ் தீவுகளும் எந்தக் கடல் பிரதேசத்தில் இருக்கின்றன ?

729. வொம்பாட் (Wombat) மிருகமா பறவையா, சாதாரணத் தாவரமா ?

730. வெங்காயம் ஒரு பிரபலமான மலர்க் குடும்பத்தைச் சேர்ந்த தாவரம். அது எந்த மலர் ?

731. ஸெரபெலம் (Cerebellam) என்பது நம் உடலில் எந்தப் பாகத்திலுள்ளதென்று தெரியுமா ?

732. ஒரு துளி நீரில் காணும் ஒவ்வொரு பிராண வாயு அணுவோடும் இரண்டு.......அணுவைக் காணலாம். கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்ய முடியுமா ?

733. எரிட்ரியா கடற்கரையில் வந்து மோதித் திரும்பும் கடலின் பெயர் என்ன ?

734. தூரக் கிழக்கிலுள்ளதொரு தீவை ஆசிய மக்கள் தைவான் என்று அழைக்கிறார்கள். ஆனால் ஐரோப்பியர் இதை வேறு பெயரிட்டுக் குறிப்பிடுகிறார்கள். அது என்ன?

735. அக்கியான் கடல் எங்குள்ளது?

736 புகழ்பெற்ற பிளாசிச் சண்டையில் வெற்றி கண்ட ஆங்கிலத் தலைவரின் பெயர் என்ன?

737. இங்கிலாந்தின் தொழிற்கட்சியின் முதல் பிரதமர் யார்?

738. க்யூபாவின் தலைநகர் எது?

739. 1964ம் ஆண்டில் நிகழ்ந்த ஒலிம்பிக் பந்தயங்கள் எந்த நாட்டில் நடைபெற்றன ?

740. பிரான்ஸ் தேசத்து மாவீரன் நெப்போலியன் பிறந்த இடம் எது?

741. பிரிட்டனில் 1265ம் ஆண்டு ஒரு அரசியல் சபை கூட்டப்பட்டது. பொதுவாக இதையே முதல் பார்லிமெண்ட் என்று அழைக்கிறார்கள். இதை கூட்டியது யார் தெரியுமா?

742. ஆலிவர் கிராம்வெல்லினால் ஒரு பிரபல கவிஞருக்கு அந்நிய மொழிகளின் காரியதரிசி' — செகரட்டரி ஃபார் ஃபாரின் டங் — பதவி தரப்பட்டது. அந்தக் கவிஞர் யார்?

743. போல் வால்ட்டிங் — உயரம் தாண்டுதல் — ஒரு பிரபல விளையாட்டாக இருக்கிறது இன்று. ஆனால் எப்போது எங்கே இவ்விளையாட்டு ஆரம்பமானதென்று தெரியுமா?

744. பீட்டர் பான் (Peter Pan) என்ற புகழ்பெற்ற நவினத்தை எழுதியது யார்?

745. அங்கிள் ரீம்ஸ், பிரர் ஃபாக்ஸ், பிரர் ராபிட், டார் பேபி ஆகிய பாத்திரங்களைப் படைத்த ஆசிரியரின் பெயர் என்ன?

746. லூயி கரோலின் உண்மையான பெயர் என்ன?

747. ஷேக்ஸ்பியர் எழுதிய முதல் நாடகம் எது?

748. ஏசு பிரான் சிறு பையனாக இருந்தபோது எந்தக் கைத்தொழிலைக் கற்றுத் தேர்ந்தார் என்று தெரியுமா?

749. குட் சமாரிட்டன் — என்ற ஏசுவின் உபதேசக் கதை இரு நகரங்களை இணைக்கும் ஒரு ராஜபாட்டையில் நடந்தது. அவ்விரு நகரங்கள் எது தெரியுமா

750. ரியா, கிவி, எமு, நெருப்புக் கோழி ஆகிய பறவைகள் ஒரு விசேஷத் தகுதி யுடையவைகளாக விளங்குகின்றன. அது என்ன?

751. கீழ்க்கண்ட துறைமுகங்கள் எந்தெந்த நாட்டில் உள்ளன (a) இஸ்மிர் (b) கோப் (c) ப்ரமென் (d) ஆண்ட்வெர்ப் (e) வான்கோவர்

752. கார்டோம் இரு நதிகளின் சந்திப்பில் அமைந்துள்ளது. அந்த நதிகள் எவை?

753. கொரியாவின் தலைநகரம் எது?

தெரியுமே!

■ 728. பசிபிக் கடலில். 729. ஒரு மிருகம். 730. லில்லி. 731. மூளைப் பகுதியில். 732. ஜல வாயு அணு. 733. செங்கடல். 734. ஃபார்மோஸா. 735. கிரீஸுக்கும் துருக்கிக்குமிடையே. 736. ராபர்ட் கிளைவ். 737. ராம்ஸே மாக்டொனல்டு. 738. டார்ஸெட். 739. ஜப்பானில். 740. கார்ஸிகா தீவிலுள்ள அஜாக்ஸியோ என்ற ஊரில். 741. சைமன் டி மாண்ட்ஃபோர்டு என்பவர். 742. ஜான் மில்டன். 743. கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்திலுள்ள லேக் டிஸ்ட்ரிக்டில் - (ஏரி ஜில்லா) 744. ஜே. எம். பாரி. 745. ஜோயல் சாண்ட்லர் ஹாரிஸ். 746. சார்லஸ் டாட்ஜ்ஸன். 747. லவ்ஸ் லேபர்ஸ் லாஸ்ட். 748. தச்சு வேலை. 749. ஜெருஸலம், ஜெரிக்கோ. 750. இவைகளால் பறக்க முடியாது. 751. (a) துருக்கி, (b) ஜப்பான், (c) கிழக்கு ஜெர்மனி, (d) பெல்ஜியம், (e) கானடா. 752. வெள்ளை நைல் நீல நைல். 753. ஸியோல். ■

அயர்வூட்டும் அன்றாட வேலைகளிலிருந்து

உற்சாக உல்லாசம்

இந்திரஜால் காமிக்ஸ் - ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு, ஏன் வயது வந்தவர்களுக்கும்கூட மகிழ்ச்சியூட்டும் மாதமிருமுறை. வேதாளங்க்ளின் வீரதீரச் செயல்களுடன், ஃப்ளாஷ் கோர்டன் மற்றும் இதர மயிர்கூச்செரியும் படக் கதைகளும் அடங்கியது.

ஆறுமொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது—ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ் மற்றும் பெங்காளி.

இந்திரஜால் காமிக்ஸ்

ஒவ்வொருக் குழந்தையும் தவருமல் படிக்க விரும்பும் புத்தகம்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு, பம்பாய் - 400001



சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்



உங்கள் மகன் பெரியவனானதும் எந்தத் தொழில் செய்யப்போகிறான்? என்ஜினியரா? கட்டடக்கலைஞரா? டாக்டரா? வக்கீலா? எதுவானாலும் சரி அதற்கு ஏராளமாகப் பணம் தேவை. அவனது எதிர்காலத்திற்கென்று பணம் சேமித்து வருகிறீர்களா? யூகோ பாங்கில் சேமித்து வாருங்கள்; உங்கள் பணம் பெருகிக் கொண்டே போகும்.

யூகோ பாங்க்
வளம் பெற வழி
வகுத்தளிக்கின்றது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம் : கல்கத்தா

UCO-2/71.



ராசுவும் வாசுவும் பாப்பின்ஸ் கொள்ளையை முறியடித்த சாதனை
ஊரடங்கிய ஓரிரவு ராசு, வாசு இருவருமே ஓய்ந்துறங்கிய வேளை...
கள்ளன் ஒருவன் மெள்ள உள்ளே புகுந்தானாம் ஜன்னல் வழியாக...
கோர்ட்டிலே நீதிபதி தீட்டினாராம் தண்டனை திருடனுக்குச் சிறைவாசம்.
பாலகர் இருவருக்கும் பரிசளித்தார் பெரிசாய் பாப்பின்ஸ் பாக்கெட்டு!
ருசியானவை
அருமையானவை
பிரமாதமானவை
5 பழரசச் சுவை வகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி,
எலுமிச்சை,
ஆரஞ்சு, சாத்துக்குடி.
ஒவ்வொரு சுருளிலும் 13
மிட்டாய் வில்லைகள்—
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்